بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 15

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

02 ரமலான் 1442 ஹிஜ்ரி கமரி 15 ஷஹாதத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 15 ஏப்ரல் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

فَاَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَاعْتَصَمُوْا بِهٖ فَسَيُدْخِلُهُمْ فِيْ رَحْمَةٍ مِّنْهُ وَفَضْلٍ وَّيَهْدِيْهِمْ اِلَيْهِ صِرَاطًا مُّسْتَقِيْمًا

எனவே அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொண்டு அவனைப் பலமாகப் பற்றிக் கொண்டவர்களை, நிச்சயமாக அவன் தன்னுடைய பெருங் கருணையிலும் பெரும் அருளிலும் நுழையச் செய்வான். மேலும் தன் பக்கம் வரக்கூடிய நேரான வழியினை அவர்களுக்குக் காட்டுவான். (4:176)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எனது இந்த ஜமாஅத் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத் இல்லையென்றால் பின்னர் இறைவன் மீது இட்டுக்கட்டிய ஒருவருக்கு காலக்கெடு வழங்கப்பட்டது என்பதை ஒரு சமுதாயத்தின் வரலாற்றிலிருந்து எனக்கு எடுத்துக் காட்டுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### இட்டுக்கட்டுபவர் ஒருபோதும் காலக்கெடு பெறுவதில்லை

நாம் இல்ஹாம் கிடைப்பதாகவும், இறைவனுடன் உரையாடுவதாகவும் வாதம் செய்து அதனை வெளியிட்டு பொதுவாக பல வருடங்களாகி விட்டன. ஆயினும் பராஹீன் (எனும் நூல்) வெளியிட்ட காலத்தை கணக்கிட்டால் கூட 20 வருடங்கள் ஆகிவிட்டன. எம்மைப் பொய்யர் என்றும், எமது வாதத்தை இட்டுக்கட்டு என்றும் கூறக்கூடிய எம்முடைய எதிரியிடம் எவராவது இந்த கேள்வியை கேட்கட்டும். அதாவது தமக்கு இல்ஹாம் வருவதாகவும், இறைவனுடன் உரையாடுவதாகவும் இட்டுக்கட்டி கூறுகின்ற பொய்யருக்கு இறைவன் எந்த காலக்கெடுவும் வழங்குவதில்லை. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமும் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்: நீர் சில விஷயங்களை உம் புறமிருந்து கூறுகின்றீர் என்றால் நாம் உமது உயிர் நாடியைத் துண்டித்து விடுவோம். அவ்வாறிருக்க வேறு எவருக்கு என்ன சிறப்பு இருக்க முடியும்?

இதிலிருந்து தெளிவாக புரிவது என்னவென்றால், அல்லாஹ்வின் மீது, இல்ஹாம் இறங்குவதாக இட்டுக்கட்டி கூறுபவன் ஒருபோதும் காலக்கெடு பெற முடியாது. இப்போது நாம் கேட்கின்றோம். அதாவது எமது இந்த ஜமாஅத் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஜமாஅத் இல்லையென்றால் பின்னர் இறைவன் மீது ஒருவர் இட்டுக்கட்டி அதன் பிறகு அவருக்கு காலக்கெடு வழங்கப்பட்டது என்பதை ஒரு சமூதாயத்தின் வரலாற்றில் எனக்கு எடுத்துக் காட்டுங்கள்.

எமக்கான தெளிவான அளவுகோல் இதுவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டம் 23 ஆண்டு வரை நீடித்திருந்தது. அந்த உண்மையாளரும் மற்றும் முழுமையான நபியின் காலகட்டத்திற்கு ஏறக்குறைய இணையான காலத்தை இறைவன் எமக்கு இதுவரை வழங்கியுள்ளான். ஏனென்றால் பராஹீன் (நூல்) வெளியீட்டிலிருந்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. முடிவை அறியாத ஆட்சேபனை செய்கின்றவரின் பார்வையில் இட்டுக்கட்டப்பட்ட முதல் காலகட்டம் அதுவே ஆகும். இப்போது நாம் எல்லோரும் ஒப்புக் கொண்ட ஒரு உண்மையாளரை இன்னும் கூறப்போனால் அனைத்து உண்மையாளர்களின் தலைவராக விளங்கக்கூடிய உண்மையாளரின் காலகட்டத்திற்கு இணையான காலகட்டத்தை நாம் முன் வைக்கின்றோம். இந்த அநீதியாளர்கள் பொய் என்று இப்போது வரை அதனை கூறிக் கொண்டே செல்கின்றனர்.

வேதனை என்னவென்றால், எம்மைப் பொய்ப்படுத்துகின்ற எண்ணத்தில் அவர்கள் இந்த அளவிற்கு குருடர்களாகி விட்டனர். அதாவது இந்த நிராகரிப்பின் விளைவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எவ்வாறு ஏற்படுகின்றது என்பதைக் கூட அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். ஏனென்றால் 20, 22 வருடங்கள் வரை இறைவன் ஒரு பொய்யருக்கு உதவி செய்ய முடியும் என்றால், பின்னர் எனக்கு அந்த விஷயம் முற்றிலும் ஆச்சரியத்தை தருகின்றது. இல்லை; இல்லை. உள்ளம் நடுங்குகின்றது. அந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்திற்கு என்ன ஆதாரத்தை நம்மால் முன் வைக்க முடியும்?

ஓர் உண்மையான முஸ்லிம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றக்கூடிய நபரின் நாவிலிருந்து ஒருபோதும் இந்த கூற்று வெளிவர முடியாது. அதாவது ஒரு பொய்யரும், இட்டுக்கட்டுபவரும் இந்த அளவிற்கு நீண்ட காலக்கெடுவை பெற முடியும் என்று அவரால் கூற முடியாது. எந்தவொரு அடையாளமும், சான்றும் அதுபோன்ற வாதியின் உண்மைத்துவத்திற்கு கிடைக்கவில்லை என்றாலும் கூட அந்நிலையில் ஓர் உண்மையான முஸ்லிம் நல்லெண்ணம் மற்றும் ஈமானின் அடிப்படையில் அவரை நிராகரிக்காமல் இருப்பது அவர் மீது கடமையாகும். ஏனென்றால் அவரது காலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்துடன் ஒப்புமை பெற்று விட்டது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 1 பக்கம் 274 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூன்று அறிவுரைகள்

(1178) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: எனது உயிர் நண்பர் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்) எனக்கு மூன்று விஷயங்களை வலியுறுத்திக் கூறினார்கள். அதனை மரணிக்கும் வரை கைவிடக்கூடாது என்று கூறினார்கள். ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டும். லுஹா தொழுகையை தொழ வேண்டும். வித்ர் தொழுகையை தொழுது விட்டு உறங்க வேண்டும்.


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 மார்ச் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **12 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது மரணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இறுதி ஹஜ் செய்தார்கள். அல்லது குழப்பம் நன்கு ஏற்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு எவ்வாறிருப்பினும் அது அன்னாரின் கடைசி ஹஜ்ஜாக இருந்தது. அப்போது குழப்பவாதிகள் தலைதூக்க ஆரம்பித்து விட்டனர். இதை அமீர் முஆவியா அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஜ் செய்து விட்டு அமீர் முஆவியா அவர்களும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் மதீனாவுக்கு திரும்பி வந்தார்கள். சில நாட்கள் தங்கியிருந்த அவர்கள் திரும்பிச் செல்லும்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை தனியாகச் சந்தித்து ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். அதாவது, குழப்பம் மேலோங்குவதை காண முடிகிறது. தாங்கள் அனுமதி அளித்தால் இதைக் குறித்து நான் தங்களிடத்தில் பேச விரும்புகிறேன் என்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், கூறுங்கள் என்றார்கள். அதற்கு முஆவியா அவர்கள், எனது முதலாவது ஆலோசனை என்னவென்றால், தாங்கள் என்னுடன் சிரியாவுக்கு செல்லுங்கள். ஏனென்றால் சிரியாவில் எல்லாவித அமைதியும் உள்ளது. எந்த விதமான குழப்பமும் அங்கில்லை. இங்கு திடீரென்று குழப்பம் தலைதூக்கினால் அதற்கான ஏற்பாடு இல்லை என்றார்.

அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பதிலளிக்கும் விதமாக கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகாமையை எவ்விதத்திலும் விட்டு விட தயாராக இல்லை. என்னுடைய உடல் சிதறடிக்கப்பட்டாலும் சரியே. ஹஸ்ரத் முஆவியா அவர்கள் கூறினார்கள்: அவ்வாறென்றால் என்னுடைய இரண்டாவது ஆலோசனை இதுவாகும். அதாவது தங்களை பாதுகாப்பதற்காக சிரியாவின் ஒரு படைப்பிரிவை நான் அனுப்பி வைக்க எனக்கு அனுமதி தாருங்கள். அவர்கள் இருக்கும்போது எந்த நபரும் தீங்கிழைக்க முடியாது.

அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், உஸ்மானுடைய உயிரைப் பாதுகாப்பதற்காக பைத்துல் மாலின் மீது இந்த அளவு சுமையை என்னால் போடவும் முடியாது. படையை வைத்துக் கொண்டு மதீனாவாசிகளை வறுமையில் ஆழ்த்தவும் நான் விரும்பவில்லை என்று கூறினார்கள். அதைக்கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள், அவ்வாறென்றால் எனது மூன்றாவது ஆலோசனை இதுவாகும். அதாவது உஸ்மான் இல்லாமல் போனால் இங்கிருக்கும் சஹாபிகளில் ஒருவரை முன்னிருத்த தைரியம் கொண்டுள்ளனர். ஆகவே சஹாபிகளை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைத்து விடுங்கள் என்றார். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இதை ஏன் செய்ய வேண்டும்? எந்த மக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்று சேர்த்தார்களோ நான் அவர்களை சிதறடிக்க வேண்டுமா என்ன? என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அழ ஆரம்பித்தார்கள். உங்களை பாதுகாப்பதற்காக நான் எடுத்து வைத்த திட்டங்களுள் ஒன்றை கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் குறைந்தபட்சம் மக்களிடையே இந்த அறிவிப்பையாவது செய்து விடுங்கள். அதாவது என்னுடைய உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு பழிவாக்கும் உரிமை ஹஸ்ரத் முஆவியாவிற்கு உண்டு என்று கூறிவிடுங்கள். ஒருவேளை மக்கள் இதற்கு அஞ்சி தீங்கிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றார்கள்.

அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், முஆவியாவே! எது நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும். நான் இதை செய்ய முடியாது. ஏனென்றால் நீங்கள் கடுமையான இயல்பு கொண்டவர் ஆவீர்கள். ஆகவே நீங்கள் முஸ்லிம்களின் மீது கடுமை காட்டி விடக்கூடும் என்றார்கள்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அழுதவாறு அங்கிருந்து எழுந்து, எனக்கு புரிகிறது. இது கடைசி சந்திப்பாக இருக்கலாம் என்றார்கள். பிறகு வெளியே வந்து சஹாபிகளைப் பார்த்து, இஸ்லாத்தின் அடிப்படை உங்களிடம் உள்ளது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இப்போது முற்றிலும் பலவீனமாகி விட்டார்கள். குழப்பம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நீங்கள் இதை கண்காணித்து வாருங்கள் எனக்கூறியவாறு ஹஸ்ரத் முஆவியா அவர்கள் சிரியாவை நோக்கி புறப்பட்டார்கள்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 285, 286)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் திட உறுதி மற்றும் தைரியம் குறித்து முஜாஹித் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது வீட்டிலிருந்து சிறைபிடித்தவர்களை எட்டிப் பார்த்து கூறினார்கள்: என்னுடைய சமுதாயமே! என்னைக் கொன்று விட வேண்டாம். ஏனென்றால் நான் இக்காலத்தின் அரசனாவேன். மேலும் உங்களுடைய முஸ்லிம் சகோதரனாவேன். இறைவன் மீது ஆணையாக! என்னுடைய நிலைப்பாடு சரியாக இருந்தாலும் சரி! அல்லது என்னிடமிருந்து ஏதேனும் பிழை ஏற்பட்டிருந்தாலும் சரி! நான் எப்பொழுதும் இயன்ற அளவுக்கு சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்துள்ளேன்.

நினைவிற் கொள்ளுங்கள்! நீங்கள் என்னைக் கொலை செய்து விட்டால் அதன் பிறகு நீங்கள் ஒருபோதும் ஒன்றுகூடி தொழ முடியாது. அதேபோன்று, நீங்கள் ஒன்றுசேர்ந்து ஜிஹாதும் செய்ய முடியாது. மேலும் அதேபோன்று, போர்ச் செல்வம் உங்களிடத்தில் நியாயமான முறையில் பங்கிடப்படவும் முடியாது என்றார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: முற்றுகையிட்டவர்கள் இதற்கு மறுப்பு தெரிவித்தபோது அன்னார் கூறினார்கள்: நான் உங்களிடத்தில் இறைவன் மீது ஆணையிட்டு கேட்கிறேன். அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரண வேளையில் நீங்கள் ஒற்றுமையாக இருந்தீர்கள். நீங்கள் அனைவரும் மார்க்கம் மற்றும் உண்மையில் இருந்தீர்கள். அப்போது கிலாஃபத்தைக் குறித்து நீங்கள் துஆ கேட்கவில்லையா என்ன? நீங்கள் இப்போது என்ன கூற வருகிறீர்கள்? அல்லாஹ் உங்களுடைய துஆக்களை ஏற்றுக் கொள்ளவில்லை என கூறுகிறீர்களா? அல்லது இப்போது அல்லாஹ்வுக்கு மார்க்கத்தின் மீது அக்கறையில்லை என்று கூறுகிறீர்களா? அல்லது நான் இந்த கிலாஃபத்தை வாளின் ஆதிக்கம் மூலம் பெற்றேன் என்று கூற விரும்புகிறீர்களா? அல்லது முஸ்லிம்களின் ஆலோசனையின்றி இதை அபகரித்துக் கொண்டேன் என்று கூற விரும்புகிறீர்களா? அல்லது பிற்காலத்தில் அல்லாஹ்வுக்கு என்னைப்பற்றி எந்த அளவுக்கு தெரியுமோ

அவ்விஷயங்களை எனது கிலாஃபத்தின் ஆரம்ப காலத்தில் அல்லாஹ் அறியாதவனாக இருந்தான் என நீங்கள் கருதுகிறீர்களா? இதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால் அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக்கிறான் என்றார்கள்.

இதைக் கேட்ட பிறகும் முற்றுகையிட்டவர்கள் அன்னாரின் பேச்சை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! நீ இவர்களை நன்றாக கணக்கெடுப்பாயாக. இவர்கள் அனைவரையும் பிடிப்பாயாக. இவர்களில் ஒருவரையும் விட்டுவிடாதே.

முஜாஹித் கூறுகிறார்: அந்தக் குழப்பத்தில் யாரெல்லாம் பங்கெடுத்தார்களோ அவர்கள் அனைவரையும் அல்லாஹ் அழித்தான்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 38 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அபூ லைலா கின்தீ கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்தபோது நான் அவர்களைப் பார்த்தேன். அன்னார் ஒரு ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து கூறினார்கள்: மக்களே! என்னைக் கொலை செய்ய வேண்டாம். என்னுடைய தவறு என்றால் நான் பாவமன்னிப்புக் கேட்க வாய்ப்பு தாருங்கள். அல்லாஹ் மீது ஆணையாக! நீங்கள் என்னைக் கொன்று விட்டால் ஒருபோதும் ஒன்றுகூடி தொழ முடியாது. ஒருபோதும் ஒன்று சேர்ந்து எதிரிகளுக்கெதிராக போரிட முடியாது. மேலும் நீங்கள் நிச்சயமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு கொள்வீர்கள். நீங்கள் இவ்வாறு குழப்பத்தில் சிக்கி விடுவீர்கள் என்றார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அன்னார் விரல்களை கோர்த்து, இவ்வாறு சிக்கிக் கொள்வீர்கள் என்றார்கள்.

அதன் பிறகு அன்னார் கூறினார்கள்:

وَ يٰقَوۡمِ لَا يَجۡرِمَنَّكُمۡ شِقَاقِیۡۤ اَنۡ يُّصِيۡبَكُمۡ مِّثۡلُ مَاۤ اَصَابَ قَوۡمَ
نُوۡحٍ اَوۡ قَوۡمَ هُوۡدٍ اَوۡ قَوۡمَ صٰلِحٍ وَمَا قَوۡمُ لُوۡطٍ مِّنۡكُمۡ بِبَعِيۡدٍ

என் சமுதாயத்தினரே! என்னுடனான (உங்கள்) பகைமை நூஹின் சமுதாயத்திற்கோ, ஹூதின் சமுதாயத்திற்கோ, ஸாலிஹின் சமுதாயத்திற்கோ நேர்ந்த துன்பத்தைப்போன்ற துன்பத்திற்கு உங்களையும் ஆளாக்க உங்களைத் தூண்ட வேண்டாம். லூத்தின் சமுதாயத்தினர் உங்களை விட்டுத் தொலைவில் இல்லை. (11:90)

மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினார்கள். அவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சந்திக்க வந்தார். அன்னாரிடம் இங்கு நடப்பவை குறித்து உங்கள் அபிப்ராயம் என்ன? என்று கேட்டார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சண்டையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இவ்விஷயம் உறுதியான சான்றாக உமக்கு சாதகமாக இருக்கும் என்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 39 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

முஹம்மது பின் சீரீன் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் அன்ஸாரி அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் வந்து, இந்த அன்ஸார் வாசலில் ஆஜராகியுள்ளனர். தாங்கள் விருப்பப்பட்டால் நாங்கள் இரண்டாவது முறையாக அல்லாஹ்வின் அன்ஸாராக ஆகுவதற்கு ஆயத்தமாக உள்ளோம் என்கின்றனர் எனக் கூறினார். இதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அவ்வாறன்று. ஒருபோதும் போர் செய்யக்கூடாது என்றார்கள்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: யவ்முத் தார் அன்று நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் கூறினேன். அமீருல் மூமினீன் அவர்களே! தற்போது வாளை ஏந்துவதே பொருத்தமானது என்று கூறினேன். அதற்கு அன்னார், அபூ ஹுரைராவே! நீங்கள் அனைத்து மக்களையும் என்னையும் கொல்வதை விரும்புவீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான் இல்லை என்றேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நீங்கள் ஒரு நபரைக் கொன்றால் கூட அனைவரும் கொல்லப்பட்டு விடுவார்கள் என்றார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு நான் திரும்ப வந்து விட்டேன். அந்த சண்டையில் பங்கெடுக்கவில்லை.

முன்பும் இச்சம்பவமும் கூறப்பட்டது. அதில் ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள், இன்று தான் போர் புரிவதற்கான தகுந்த தருணம் என்று கூறியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்கள் கூறுகிறார்கள்: முற்றுகையிடப்பட்ட நாளில் நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் சென்று, அமீருல் மூமினீன் அவர்களே! அவர்களுடன் போரிடுங்கள். ஏனென்றால் அவர்களுடன் போர் செய்வதை அல்லாஹ் உங்களுக்கு ஆகுமானதாக ஆக்கியுள்ளான் என்று கூறினேன். அதற்கு அன்னார், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவர்களுடன் ஒருபோதும் போரிட மாட்டேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: இவ்வாறான நிலையில் அம்மக்கள் அன்னாருடைய வீட்டினுள் நுழைந்தார்கள். அப்போது அன்னார் நோன்பு நோற்றிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தம் வீட்டு வாசலில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்களை கண்காணிப்பாளராக நியமித்திருந்தார்கள். அன்னார் கூறினார்கள்: எவர் எனக்கு கட்டுப்பட விரும்புகிறாரோ அவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்களுக்கு கட்டுப்படட்டும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில், அமீருல் மூமினீன் அவர்களே! நிச்சயமாக தங்களிடத்தில் வீட்டினுள் தங்களுடைய பாதுகாப்பிற்கு ஒரு குழு உள்ளது. அதற்கு அல்லாஹ்வுடைய உதவியும், ஆதரவும் உள்ளது. அவர்கள் முற்றுகையாளர்களை விட எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் கிளர்ச்சியாளர்களுடன் போர் புரிய எனக்கு அனுமதி தாருங்கள் என்றேன்.

அதற்கு அன்னார், அல்லாஹ்வின் மீது ஆணையாக! உமக்கு நான் கூறுகிறேன் என்றோ அல்லது அல்லாஹ்வின் பெயரால் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன் என்றோ கூறினார்கள். மேலும் எந்தவொரு நபரும் எனக்காக தமது இரத்தத்தை சிந்த வேண்டாம். அல்லது எனக்காக பிறருடைய இரத்தத்தை சிந்த வேண்டாம்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 39 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாததிற்கு முன்னுள்ள குழப்பத்தைக் குறித்தும் அன்னாருடைய ஷஹாதத் சம்பவத்தைக் குறித்தும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: கிளர்ச்சியாளர்களுக்கு வெளிப்படையாக வெற்றி கிடைத்து விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கிலாஃபத்திலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூற ஒரு நபரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் கிளர்ச்சியாளர்கள் அனுப்பி வைத்தார்கள். இது அவர்களின் இறுதி சூழ்ச்சியாக இருந்தது. ஏனென்றால் அவரே பதவி விலகிக் கொண்டால் இவர்களுக்கு தண்டனை கொடுப்பதற்கு முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும், சந்தர்ப்பமும் இருக்காது என புரிந்திருந்தனர். அதாவது கிளர்ச்சியாளர்களை முஸ்லிம்கள் தண்டிக்க இயலாது. அந்த தூதுவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடத்தில் வந்தபோது அன்னார் கூறினார்கள்: நான் அறியாமைக் காலத்திலும் தீமையிலிருந்து விலகி இருந்தேன். இஸ்லாமிய காலத்திலும் அதன் கட்டளைகளை முறிக்காமல் இருந்தேன். இறைவன் எனக்கு வழங்கிய பொறுப்பை எந்த குற்றத்தின் அடிப்படையில் நான் விட்டு விட வேண்டும்? இறைவன் எனக்கு அணிவித்த இந்த மேலங்கியை நான் ஒருபோதும் கழற்ற மாட்டேன் என்றார்கள். அந்த நபர் இந்த பதிலைக் கேட்டு திரும்பினார்.

தமது தோழர்களிடத்தில் சென்று இவ்வாறு அவர்களுக்கு இச்செய்தியை எடுத்துரைத்தார். இறைவன் மீது ஆணையாக! நாம் கடும் துன்பத்தில் சிக்கிக் கொண்டோம். இறைவன் மீது ஆணையாக! உஸ்மானை கொலை செய்தால் அன்றி நாம் முஸ்லிம்களின் பிடியில் இருந்து தப்ப முடியாது. ஏனென்றால் அப்போது ஆட்சி தலைகீழாக ஆகி இருக்கும்.

நிர்வாகம் சீர்கெட்டிருக்கும். கேள்வி கேட்க யாரும் இருக்க மாட்டார். ஆனால் அவரைக் கொல்வது எவ்வகையிலும் ஆகுமானதல்ல. அதாவது தீர்வு இதுதான். ஆனால் கொல்வது ஆகுமானது கிடையாது.

அந்த நபருடைய இக்கூற்று அம்மக்களின் பதற்றத்திற்கு சான்றாக இருக்கின்ற அதே நேரத்தில் அப்பொழுதுவரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சார்பாக எந்தவொரு பிரச்சனையும் உருவாகவில்லை என்றும், அதை சாக்காக இவர்கள் எடுத்து வைக்க இயலாத நிலை இருந்தது என்பதற்கும் இது சான்றாக உள்ளது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்வது எவ்வகையிலும் ஆகுமானதன்று என்று அவர்களின் உள்ளம் உணர்ந்திருந்தது.

இம்மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டிக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்கள் வந்தார்கள். இவர் குஃப்ர் காலத்தில் தமது சமுதாயத்தில் மிகவும் கண்ணியத்திற்குரியவராக கருதப்பட்டார். இவரை யூதர்கள் தம் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இவருக்கு மாற்றமான அறிஞர் இல்லை என்று கருதி வந்தனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்கள் கதவருகில் நின்று கொண்டு அம்மக்களுக்கு அறிவுரை செய்ய ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்வதிலிருந்து அம்மக்களை தடுத்தார்கள். மக்களே! இறைவனுடைய வாளை உங்கள் மீது இழுக்காதீர்கள். இறைவன் மீது ஆணையாக! நீங்கள் வாளை உருவினால் அதை உரையில் இட சந்தர்ப்பம் கிடைக்காது. பிறகு எப்பொழுதுமே முஸ்லிம்களிடத்தில் வாள் உருவியதாகவே இருக்கும். எப்போதும் முஸ்லிம்களிடத்தில் சண்டை தொடரும். சிந்தியுங்கள். இன்று கசையைக் கொண்டு உங்கள் மீது ஆட்சி செய்யப்படுகிறது.

பொதுவாக ஷரீஅத்தின் கட்டளைக்கேற்ப கசையடி கொடுக்கப்பட்டு வந்தது. நீங்கள் இம்மனிதரைக் கொன்று விட்டால், அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்து விட்டால், வாளின்றி ஆட்சி நடக்காது. அதாவது சிறுசிறு குற்றங்களுக்காகவும், குற்றவாளிகள் கொலை செய்யப்படுவார்கள். நினைவிற் கொள்ளுங்கள்! தற்போது மதீனாவை மலக்குகள் பாதுகாத்து வருகின்றனர். நீங்கள் இவரை கொலை செய்து விட்டால் மலக்குகள் மதீனாவை விட்டுச் சென்று விடுவர்.

இந்த அறிவுரையிலிருந்து அம்மக்கள் எவ்வாறு பயனடைந்தனர் என்றால் அப்துல்லாஹ் பின் ஸலாம் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியை விரட்டி விட்டனர். அவரது முந்தைய மார்க்கத்தை குத்திக்காட்டி ஏளனமாக, யூத பெண்ணின் மகனே! உமக்கு இத்துடன் என்ன சம்பந்தம்? என்று கேட்டனர்.

அந்தோ பரிதாபம்! அம்மக்களுக்கு அப்துல்லாஹ் பின் ஸலாம் என்பவர் இந்த யூத பெண்ணுடைய மகன் என்று ஞாபகம் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையில் இவர் ஈமான் கொண்டது அவர்களுக்கு ஞாபகம் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர் நம்பிக்கை கொண்டபோது மிகவும் மகிழ்வுற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அனைத்து சோதனையிலும், துன்பத்திலும் இவர் பங்கெடுத்திருந்தார்.

இதுமட்டுமின்றி ஹஸ்ரத் அலி அவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரதிநிதி என்று கூறி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக நிறுத்தி அம்மக்களை தூண்டிவிடுபவனும், அவர்களின் தலைவனுமாகிய அப்துல்லாஹ் பின் சபாவும் யூத பெண்ணின் மகனாவான் என்பதையும் இவர்கள் மறந்து விட்டிருந்தனர். அப்துல்லாஹ் பின் சபா யூதனாக இருந்தான். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக வெளிக்காட்டிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் அவர்கள் அந்த மக்களின் பதிலைக் கண்டு நிராசையடைந்து சென்று விட்டார்கள்.

கதவு வழியாகச் சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் கொலை செய்வது கடினமாகும். ஏனென்றால் அங்கு தடுப்பதற்காக நின்று கொண்டிருந்தவர்கள் கொலை செய்வதற்கும், கொலை செய்யப்படுவதற்கும் ஆயத்தமாக இருப்பதை இம்மக்கள் கண்டு கொண்டனர். ஆகவே அக்கம் பக்கத்து வீட்டின் சுவர் ஏறி குதித்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்து விடலாம் என தீர்மானித்தனர். ஆகவே இந்த எண்ணத்தோடு சிலர் பக்கத்து வீட்டாரின் சுவர் ஏறி குதித்து அன்னாருடைய அறைக்குள் புகுந்தனர். அவர்கள் உள்ளே நுழைந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். எப்போதிருந்து இந்த முற்றுகை ஆரம்பித்ததோ அப்போதிருந்து இரவு பகலாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் மூழ்கி இருந்தார்கள். இதைத்தவிர வேறு பணியின் பக்கம் கவனம் செலுத்தவில்லை.

அந்நாட்களில் மற்றொரு விஷயத்தையும் அன்னார் செய்திருந்தார்கள். அது என்னவென்றால், அவர்கள் வீட்டினுள் நுழைவதற்கு முன்பு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இரு நபர்களை கஜானாவை பாதுகாக்கும் பொருட்டு நியமித்திருந்தார்கள். ஏனென்றால் முந்தைய இரவில் கனவில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தென்பட்டார்கள். உஸ்மானே! இன்று மாலை எம்முடன் நோன்பு திறங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கனவில் கூறினார்கள். இன்று நான் ஷஹீதாகி விடுவேன் என அந்த கனவினால் அன்னார் உறுதி கொண்டிருந்தார்கள். ஆகவே பொறுப்பை நிறைவேற்றும் வகையில் இரு நபர்களை கஜானாவின் கதவருகில் பாதுகாப்பிற்காக நியமித்திருந்தார்கள். ஏனெனில் கூச்சல் குழப்பத்தில் எவராவது கஜானாவை கொள்ளையடிக்க முயற்சிக்கக்கூடாது என்று கருதினார்கள்.

சுருக்கமாக, இம்மக்கள் உள்ளே நுழைந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். தாக்குதல் தொடுத்தவர்கள் முஹம்மது பின் அபூபக்ர் ஆகவும் இருந்தார். அவர்களிடத்தில் இவர் செல்வாக்குமிக்கவராக இருந்தார். நான் அபூபக்ரின் மகனாவேன். ஆகவே எனக்கு மேன்மை உள்ளது. அனைத்து வேலைகளிலும் முன்னால் நிற்பது என் கடமை என்று கருதினார். எனவே அவர் முன் சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாடியைப் பிடித்து வேகமாக இழுத்தார்.

அவருடைய அச்செயலைக் கண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், எனது சகோதரனின் மகனே! உம்முடைய தந்தை அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இப்போது உயிருடன் இருந்திருந்தால் நீ ஒருபோதும் இவ்வாறு நடந்து கொண்டிருக்க மாட்டாய். உமக்கு என்னவாயிற்று? இறைவனுக்காக நீ என்மீது கோபம் கொண்டுள்ளாயா? இதைத்தவிர வேறு ஏதேனும் கோபம் என்மீது உள்ளதா? இறைவனுடைய உரிமைகளை உம்மை செய்ய வைத்தது தவிர உம்மீது எனக்கு வேறு ஏதாவது கோபம் உண்டா என்ன? இறைவனுடைய உரிமைகளை செலுத்துமாறுதானே உங்களுக்கு நான் கூறுகிறேன்? என்று மட்டும் கேட்டார்கள்.

இதைக்கேட்ட முஹம்மது பின் அபூபக்ர் வெட்கி தலைகுனிந்து திரும்பி விட்டான். ஆனால் மற்றவர்கள் அங்கேயே இருந்தனர். அன்றைய இரவில் பஸ்ராவுடைய படை மதீனா வந்தடைவதாக உறுதியான தகவல் கிடைத்திருந்தது. அம்மக்களுக்கு அது கடைசி வாய்ப்பாக இருந்தது. தம் வேலையை முடிக்காமல் திரும்ப மாட்டோம் என அவர்கள் தீர்மானித்திருந்தனர். அவர்களில் ஒருவன் முன்னேறி வந்து ஒரு இரும்பு தடியைக் கொண்டுஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலையில் அடித்தான். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த திருக்குர்ஆனை எட்டி உதைத்து வீசி எறிந்தான். அக்குர்ஆன் சுருண்டு விழுந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அருகில் வந்து கிடந்தது. அன்னாருடைய தலையிலிருந்து இரத்தம் வழிந்து அதில் விழுந்தது. இச்சம்பவத்திலிருந்து அவர்கள் திருக்குர்ஆனை அவமதித்தது மட்டுமின்றி அவர்களுடைய இறையச்சம் மற்றும் நேர்மையின் நிலையும் வெளிப்பட்டு விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இரத்தம் எந்த ஆயத்தில் சிந்தியதோ அது மாபெரும் முன்னறிவிப்பாக இருந்தது. அந்த முன்னறிவிப்பு தமக்குரிய காலத்தில் எந்த அளவு கம்பீரமாக நிறைவேறியது என்றால், மிகக் கடினமான உள்ளம் கொண்டவர் கூட அந்த இரத்தம் தோய்ந்த எழுத்துக்களைப் பார்த்து அச்சமுற்று தம் கண்களை மூடாமல் இருக்க மாட்டார். அந்த வசனம் என்னவென்றால்,

فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ

அல்லாஹ் உமக்காக அவர்களை நிச்சயம் பழிவாங்குவான். அவர் நன்கு கேட்பவனும், நன்கு அறிபவனும் ஆவான். (2:138)

அதன் பிறகு ஸுதான் என்ற ஒருவன் முன்னேறிச் சென்று வாளைக் கொண்டு அன்னாரை தாக்க விரும்பினான். முதல் தாக்குதலில் அன்னார் தமது கையைக் கொண்டு அதை தடுத்தார்கள். அன்னாருடைய கை வெட்டுப்பட்டது. அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இறைவன் மீது ஆணையாக! இது எந்த கை என்றால், முதன் முதலில் திருக்குர்ஆனை எழுதிய கையாகும் என்றார்கள். அதன் பிறகு அவன் இரண்டாம் முறையாக தாக்கி அன்னாரை கொல்ல விரும்பினான். அப்போது அன்னாருடைய மனைவி நாயிலா அவர்கள் அங்கு வந்து விட்டார்கள். இருவருக்கும் நடுவில் நின்று விட்டார்கள். ஆனால் கல் நெஞ்சமுடைய அவன் ஒரு பெண் மீது தாக்குதல் தொடுப்பதை விட்டும் விலகவில்லை. அவன் வாளை வீசினான். அதனால் அன்னாருடைய மனைவியின் விரல்கள் துண்டாகி விட்டன. பிறகு அவன் மீண்டும் அன்னாரின் மீது வாள் வீசினான். அன்னார் கடும் காயமுற்றார்கள். அதன் பிறகு கல் நெஞ்சமுடைய அந்த நபர், உயிர் இன்னும் பிரியவில்லை. ஒருவேளை பிழைத்துக் கொள்ளலாம் என்று கருதி, காயங்களின் வேதனையின் காரணமாக அன்னார் மயக்கமுற்று இருக்கும்போது, கடும் வேதனையால் துடித்துக் கொண்டிருக்கும்போது அன்னாருடைய கழுத்தை நெறிக்க ஆரம்பித்தான். அன்னாருடைய உயிர் உடலை விட்டு பிரிந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டவாறு மேலுலகத்திற்கு செல்லாத வரை அவன் அன்னாரின் கழுத்தை விடவில்லை. اِنَّا لِلّٰہِ وَاِنَّآ اِلَیْہِ رَاجِعُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி இக்காட்சியின் அதிர்ச்சியினால் பேச இயலாது போனார்கள். பிறகு அவர் குரல் கொடுத்ததும் கதவின் அருகே இருந்தவர்கள் உள்ளே ஓடி வந்தார்கள். ஆனால் அப்போது உதவி செய்வது வீணானதாக இருந்தது. எது நடக்க இருந்ததோ அது நடந்து முடிந்து விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஓர் அடிமை, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கிய ஸுதாவின் கையில் இரத்தம் வடியும் வாள் இருப்பதைக் கண்டு அவரால் பொறுக்க இயலவில்லை. அவர் முன்னேறிச் சென்று வாளைக் கொண்டு அவனுடைய தலையை வெட்டி வீழ்த்தினார். அப்போது அவனுடைய கூட்டாளிகளுள் ஒருவன் அவரை கொன்று விட்டான்.

இப்போது இஸ்லாமிய ஆட்சி கலீஃபா இல்லாமல் காலியாக இருந்தது. மதீனாவாசிகள் மேற்கொண்டு முயற்சி செய்வதை வீணானதாக கருதினர். ஒவ்வொருவரும் தம் வீட்டிற்குச் சென்று உட்கார்ந்து விட்டனர். கிளர்ச்சியாளர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொன்ற பிறகு வீட்டிற்குள் வரம்பு மீற ஆரம்பித்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி அவ்விடத்தை விட்டு விலகிச் செல்ல நினைத்தார்கள். அவர்கள் திரும்பிச் செல்லும்போது, அம்மக்களில் ஒரு பேறிழந்தவன் தம் கூட்டாளிகளிடத்தில் அவரைக் குறித்து மிகவும் அருவெறுக்கத்தக்க சொற்களில் விவரித்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தொன்மையான முன்னாள் சஹாபியும், அன்னாருடைய மருமகனும், இஸ்லாமிய நாடுகளின் அரசரும், காலத்தின் கலீஃபாவாகவும் இருந்த மனிதரை அப்போதுதான் இவர்கள் கொன்று முடித்திருந்தார்கள். அந்நேரத்தில் எவ்வாறு வெறுக்கத்தக்க எண்ணத்தை அவர்கள் வெளிப்படுத்தினார்கள் என்றால், சந்தேகத்திற்கிடமின்றி ஒரு வெட்க உணர்வு கொண்ட மனிதருக்கு அவர் எம்மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரியே! அதை நம்புவது மிகவும் கஷ்டமானதே! ஆனால் அம்மக்களின் வெட்கமின்மை எந்த அளவு மேலோங்கி இருந்தது என்றால், எந்தவொரு தீய செயலையும் செய்ய அவர்கள் தயங்கவில்லை. இவர்கள் ஒரு நல்ல நோக்கத்திற்காக எழவில்லை. அவர்களின் குழுவும் நல்லவர்களின் குழுவாக இல்லை. அவர்களுள் சிலர் அப்துல்லாஹ் பின் சபா எனும் யூதனின் சூழ்ச்சியில் சிக்கி, இஸ்லாத்தை எதிர்க்கும் வினோதமான போதனையின் புகழ்பாடிகளாக இருந்தனர். சிலர், எல்லை மீறிய சோசலிசம் சிந்தனையில் மூழ்கி இருந்தனர். சிலர் தண்டனை கிடைக்கப்பெற்ற குற்றவாளிகளாக இருந்தனர். அவர்கள் தம் நீண்ட கால வெறுப்பை காட்ட விரும்பினர். சிலர் வழிப்பறி கொள்ளையர்களாகவும் இருந்தனர். அவர்கள் இக்குழப்பத்தில் தம் முன்னேற்றத்தின் வழிகளைக் கண்டனர். அவர்களின் வெட்கமின்மை ஒன்றும் வியப்புக்குரியதல்ல. மாறாக இவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்றால் தான் அது வியப்பான விஷயமாகும். இவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டினரின் கூக்குரல் கேட்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட இன்னொரு அடிமையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முதல் அடிமையைக் கொலை செய்தவரை இவர் தாக்கி கொன்றார். அப்போது அவர்கள் இவரையும் கொன்று விட்டார்கள். மேலும் பெண்களின் உடல்களிலிருந்து நகைகளை பறித்துச் சென்றனர். கேலி கிண்டல் செய்தவாறு வீட்டை விட்டு வெளியேறினர்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 327–331)

இந்த கொலைகாரர்களின் தீய நடத்தையைப் பற்றி மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அவர்கள் என்ன செய்தார்கள்? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கினார்கள். அவர் இரத்தத்தில் துடித்துக் கொண்டிருக்கும்போது கொலையாளிகள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியைக் குறித்து வெறுக்கத்தக்க வீணான விஷயங்களை பேசிக் கொண்டிருந்தனர். அவருடைய உடலைக் குறித்து விவரித்துக் கொண்டிருந்தனர். பிறகு இதை விடவும் மோசமான வேலையை அவர்கள் செய்தார்கள். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியைக் குறித்து அல்ல. மாறாக அதையும் தாண்டிச் சென்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் குறித்தும் பேசினர். இந்த விஷயங்களைப் பார்த்த பிறகு நான் கூறுகிறேன். இறைவன் எனக்கு பெரும் அந்தஸ்து வழங்கியுள்ளான். அதில் நான் பெருமிதம் கொள்கிறேன். ஆனால் எனது உள்ளத்தின் நாட்டம் என்னவென்றால், அந்தோ! நான் இப்போது இல்லாமல் அந்நேரத்தில் இருந்திருந்தால், அவர்களை துண்டுதுண்டாக்கி இருப்பேன். அவர்கள் எவ்வளவு வரம்பு மீறி விட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை பர்தா இல்லாமல் செய்து, பார்த்து விட்டு, இவர் இளமையாக உள்ளாரே என்று கூறினார்கள். (ரிபோர்ட் மஜ்லிஸ் முஷாவிரத் 11,12 ஏப்ரல் 1925 ஆம் ஆண்டு பக்கம் 32,33)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் குறித்து விமர்சிப்பதை விட்டும் இவர்கள் பின்வாங்கவில்லை. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்ட விதத்தைக் கண்டு அவர் ஒருபோதும் அஞ்சவில்லை என்றே நமக்கு தெரிய வருகிறது. அதாவது, தன்னுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும் என்பதைக் குறித்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒருபோதும் அஞ்சவில்லை. வரலாற்றிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், கிளர்ச்சியாளர்கள் மதீனாவை ஆக்கிரமித்துக் கொண்டபோது, அவர்கள் தொழுகைகளுக்கு முன்பு அனைத்து பள்ளிவாசல்களிலும் பரவி விடுவார்கள். மதீனாவாசிகள் ஒன்றுசேர்ந்து அவர்களை எதிர்க்காமல் இருக்கும் வண்ணம் அவர்களை தனித்தனியாக பிரித்து விடுவார்கள். இந்த கிளர்ச்சி மற்றும் குழப்பம் ஓங்கியபோதும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தொழுவதற்காக தனியாகவே பள்ளிவாசலுக்கு வருவார்கள். கொஞ்சம் கூட அஞ்சவில்லை. வர வேண்டாம் என மக்கள் அன்னாரை தடுக்கும் வரை தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தார்கள். குழப்பம் மிகவும் அதிகரித்தபோது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டின் மீது குழப்பவாதிகள் தாக்குதல் தொடுத்தபோது, தமது வீட்டைச் சுற்றி பாதுகாப்பு பணிக்காக சஹாபிகளை நியமிப்பதற்கு பதிலாக, அன்னாரை பாதுகாக்கும் பணியில் தம் உயிர்களை ஆபத்தில் ஈடுபடுத்த வேண்டாம். ஆகவே தத்தமது வீடுகளுக்கு செல்லுங்கள் என சத்தியமிட்டு சஹாபிகளிடம் கூறினார்கள்.

உயிர் துறப்பதைக் கண்டு அஞ்சக்கூடிய ஒருவர் இவ்வாறா நடந்து கொள்வார்? என்னைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டாம். தத்தமது வீடுகளுக்குச் செல்லுங்கள் என மக்களைப் பார்த்துக் கூறுவாரா? ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஷஹாதத்தைக் கண்டு எவ்வித அச்சமும் ஏற்படவில்லை என்பது நிரூபணமாகிறது.

இந்த சம்பவங்களைக் கண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கொஞ்சம் கூட அஞ்சவில்லை என்பதற்கு இன்னொரு மாபெரும் சான்றும்

உள்ளது. குத்பாவின் ஆரம்பத்தில் எடுத்துரைக்கப்பட்டதுபோன்று, இந்தக் குழப்பத்தின்போது ஒரு முறை ஹஸ்ரத் முஆவியா அவர்கள் ஹஜ்ஜுக்காக வந்தார்கள். அவர்கள் சிரியாவுக்கு திரும்பிச் செல்லும்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மதீனாவில் சந்தித்தார்கள். தாங்கள் என்னுடன் சிரியாவுக்கு வந்து விடுங்கள். அங்கு நீங்கள் இக்குழப்பத்திலிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், முஆவியாவே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகாமையை விட எவ்விஷயத்திற்கும் நான் முன்னுரிமை வழங்க முடியாது என்று கூறினார்கள். அதற்கு முஆவியா அவர்கள், நான் கூறியதை நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்றால், சிரியாவின் ஒரு படைப்பிரிவை உங்களின் பாதுகாப்பிற்காக நான் அனுப்பி வைக்கிறேன் என்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், எனது பாதுகாப்பிற்காக ஒரு படையை வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் ரிஸ்கில் குறைவை ஏற்படுத்த விரும்பவில்லை என்றார்கள். ஹஸ்ரத் முஆவியா அவர்கள், அமீருல் மூமினீன் அவர்களே! மக்கள் ஏமாற்றி உங்களை கொலை செய்து விடுவர். அல்லது உங்களுக்கெதிராக அவர்கள் வெளிப்படையாக போர் புரியலாம் என்றார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு அதைப் பற்றி எந்த கவலையும் கிடையாது. எனக்கு என் இறைவன் போதுமானவன்.

இறுதியில் ஹஸ்ரத் முஆவியா அவர்கள், நீங்கள் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால். இதை ஒன்றையாவது நீங்கள் ஒப்புக் கொள்ளுங்கள். அதாவது விஷமக்காரர்களுக்கு சில பெரும் சஹாபிகள் மீது பெருமிதம் உள்ளது. உங்களுக்குப் பிறகு அவர்கள் வேலையை பார்த்துக் கொள்வார்கள் என கருதுகின்றனர். ஆகவே அந்த சஹாபிகளின் பெயர்களை எடுத்துக்கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். நீங்கள் அந்த சஹாபிகளை மதீனாவை விட்டு வெளியே அனுப்பி வையுங்கள். வெளிநாடுகளில் அவர்களை அனுப்பி வைத்து விடுங்கள். இதனால் விஷமக்காரர்களின் நாட்டம் ஒடுங்கி விடும். இப்போது மதீனாவில் பொறுப்பை எடுத்து நடத்துவதற்கு தகுதியுள்ள வேறு யாருமே கிடையாதே! ஆகவே உங்களுடன் மோதி கிடைக்கப்போவது என்ன? என்பதை அவர்கள் சிந்திக்கக்கூடும் என்றார்கள். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த கோரிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எந்த மக்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒன்று சேர்த்தார்களோ அவர்களை நான் எவ்வாறு நாடு கடத்த முடியும்? என்றார்கள். இதைக்கேட்ட ஹஸ்ரத் முஆவியா அவர்கள் அழுதார்கள். தாங்கள் வேறு ஒன்றும் செய்ய மாட்டீர்கள் என்றால் குறைந்தபட்சம் என்னுடைய இரத்தத்திற்கு முஆவியா பழிவாங்குவார் என்று ஒரு அறிவிப்பையாவது செய்யுங்கள் என்றார். அன்னார் கூறினார்கள்: முஆவியாவே! நீர் வேகமான இயல்புடையவர். முஸ்லிம்கள் மீது நீர் கடுமை காட்டக்கூடாதே என நான் அஞ்சுகிறேன். ஆகவே நான் இந்த அறிவிப்பையும் செய்ய இயலாது என்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பலவீனமான இதயம் கொண்டவர் என்று கூறப்படுவதுண்டு. இவ்வாறான துணிவை எத்தனை பேர் தான் காட்ட முடியும் என்பதை நீங்களே கூறுங்கள்? இந்த சம்பவங்களை கண்ட பிறகும், அன்னாரின் உள்ளத்தில் கொஞ்சமாவது அச்சம் இருந்தது என்று கூற முடியுமா என்ன? அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய உள்ளத்தில் ஏதேனும் அச்சம் இருக்க வாய்ப்பிருந்ததா என்ன?

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அச்சம் இருந்திருக்குமென்றால், நீங்கள் படைப்பிரிவை எனது பாதுகாப்பிற்காக அனுப்பி வையுங்கள். அவர்களுக்கு நான் சம்பளம் வழங்கி விடுகிறேன் என்று கூறியிருப்பார்கள். அன்னாருக்கு அச்சம் இருந்திருக்குமென்றால், என்மீது யாராவது கை வைத்தால் எனக்காக முஆவியா பழிவாங்குவார் என்று அறிவிப்பு செய்திருப்பார்கள். ஆனால் அன்னாரோ, முஆவியாவே! உம்முடைய இயல்பில் வேகம் உள்ளது. நான் உமக்கு அதற்கான அதிகாரத்தை வழங்கினால் நீர் முஸ்லிம்களின் மீது கடுமை காட்டக்கூடாதே என நான் அஞ்சுகிறேன் என்று மட்டுமே பதிலளித்தார்கள்.

இறுதியில் எதிரிகள் சுவர் ஏறிக்குதித்து அன்னார் மீது தாக்குதல் நடத்தியபோது எவ்வித அச்சமும், பயமும் இன்றி திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் ஒரு மகன் (அல்லாஹ் அவன் மீது கருணை காட்டுவானாக) முன்னேறிச் சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தாடியைப் பிடித்து வேகமாக இழுத்தான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தலையை உயர்த்தி பார்த்தார்கள். எனது சகோதரனின் மகனே! உன்னுடைய தந்தை இப்போது இருந்திருந்தால் நீ ஒருபோதும் இவ்வாறு செய்திருக்க மாட்டாய் என்று கூறினார்கள். இதைக் கேட்டதுமே அவனுடைய தலை முதல் பாதம் வரை நடுங்கி விட்டது. அவன் வெட்கி திரும்பி விட்டான். அதன் பிறகு இன்னொருவர் முன்னேறி ஒரு இரும்பு கம்பியால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலையில் அடித்தான். முன்னால் இருந்த திருக்குர்ஆனை காலால் எட்டி உதைத்தான். அதை தனியாக வீசி விட்டான். அவன் விலகியதும் இன்னொருவன் வாளைக் கொண்டு அன்னாரை ஷஹீதாக்கினான். இந்த சம்பவங்களைக் கண்ட பிறகும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிலைமைகளைக் கண்டு பயந்து போய் இருந்தார்கள் என்று யாராவது கூற முடியுமா என்ன? (கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 536, 537)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எவ்வாறு ஹஸ்ரத் நூஹ் (அலை), ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் தாவூது (அலை), ஹஸ்ரத் சுலைமான் (அலை) மற்றும் பிற நபிமார்கள் தோன்றினார்களோ அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தோன்றினார்கள். முந்தைய நபிமார்களுக்குப் பிறகு எவ்வாறு கிலாஃபத் நிலைபெற்றதோ அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகும் கிலாஃபத் தொடர்ந்துள்ளது. நாம் அறிவைக் கொண்டு பார்ப்போமானால், அதன் உண்மைத்துவத்தை அடையாளங்கண்டு கொள்ள முயற்சி செய்வோம் எனில் இது மாபெரும் தொடர் என்பதை அறிந்து கொள்ளலாம். அதாவது, கிலாஃபத் நிலைபெறுவதற்காக பத்தாயிரம் வம்சங்கள் தியாகம் செய்யப்பட்டாலும் அது பெரிய விஷயமல்ல. மற்றவர்களைக் குறித்து நான் அறியேன். குறைந்தபட்சம் என்னைக்குறித்து நான் அறிவேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கால வரலாற்றை படித்த பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மீது விழுந்த துன்பங்களை பார்க்கிறோம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோன்றிய பிறகு அவர்களிடத்தில் உருவாக்கிய அந்த ஒளியையும், ஆன்மீகத்தையும் பார்க்கிறோம். உலகில் எனக்கு பத்தாயிரம் சந்ததிகள் பிறக்க இருந்து அந்த அனைத்து சந்ததிகளையும் ஒன்று சேர்த்து ஒரேயடியாக தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டாலும், அந்தக் குழப்பம் தீர்க்கப்பட்டிருக்குமாயின் அது பேனைக் கொடுத்து யானையை வாங்கிய பேரமாக இருந்திருக்கும் என்றே நான் கருதுகிறேன். அதாவது மிகச்சிறிய பொருளைக் கொடுத்து பெரிய பொருளை வாங்கிய பேரமாக இருந்திருக்கும். பேன் என்பது மிகச்சிறிய பூச்சி. அதைக் கொடுத்து யானையை வாங்கிய பேரத்திற்கு சமமாக இருந்திருக்கும். அதை விடவும் மலிவான பேரமாக இருந்திருக்கும். உண்மை என்னவென்றால், ஒரு பொருளுக்கான உண்மையான விலையை நாம் பின்னால் தெரிந்து கொள்கிறோம்.

(நுபுவ்வத் அவ்ர் கிலாஃபத் அப்னே வக்த் பர் ஸஹூர் பஸீர் ஹோஜாத்தி ஹே, அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 246)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு கிலாஃபத்தின் முக்கியத்துவம் என்ன என்பது தெரிய வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குப் பிறகு கிலாஃபத்தின் இருக்கையில் இருப்பதற்கு தகுதியானவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அனைத்து சஹாபிகளின் பார்வையும் அன்னாரின் மீதே இருந்தது. பெரும் சஹாபிகளின் ஆலோசனையினால் இந்தப் பணிக்காக அன்னார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்னார் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மருமகனாக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகள்களை ஒன்றன் பின் ஒன்றாக மணம் முடித்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரண்டாவது மகள் மரணமடைந்தபோது, எனக்கு இன்னொரு மகள் இருந்திருந்தாலும் நான்

அவரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் மணம் முடித்திருப்பேன் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்தும், தகுதியும் இதிலிருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவாசிகளின் பார்வையில் மிகவும் உயர்ந்த இடத்தில் இருந்தார்கள். மேலும் அப்போதைய அரபு நாட்டின் நிலைமைகளுக்கேற்ப பெரும் செல்வந்தராக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, இஸ்லாத்தைக் குறித்து தப்லீக் செய்வதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த முக்கியமானவர்களுள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்கள். அன்னாரின் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் யூகம் தவறாகவில்லை. ஏனெனில் சில நாட்கள் தப்லீக்கில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவ்வாறு முதன்மையானவர்களுள் முன்னோடியாக இணைந்தார்கள். அதாவது, திருக்குர்ஆனை மிகப் பெருமிதத்தோடு நினைவுகூரும் இஸ்லாத்தில் இணைந்த அந்த ஆரம்பகால குழுவினரோடு இணைத்து விட்டார்கள். அரபு நாட்டில் அன்னாருக்கு எந்த அளவு கண்ணியமும் ஆளுமையும் இருந்தது என்றால் இந்த சம்பவத்திலிருந்து ஓரளவுக்கு நாம் அறிய முடியும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு கனவின் அடிப்படையில் மக்கா வந்தார்கள். மக்காவாசிகள் வெறுப்பில் குருடராகி அன்னார் உம்ரா செய்வதற்கு அனுமதியளிக்கவில்லை. ஆகவே ஒரு சிறப்பான நம்பிக்கைகுரிய நபரை மக்காவாசிகளிடத்தில் அனுப்பி இவ்விகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அன்னார் விரும்பினார்கள். அதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் செல்வதற்கு தயாராக உள்ளேன். ஆனால் மக்காவில் அம்மக்களுடன் யாராவது பேச முடியும் என்றால் அது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஏனென்றால் அவர் மக்களின் பார்வையில் சிறப்பான கண்ணியம் பெற்றவராவார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சென்றால் எந்த அளவுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதோ அந்த அளவுக்கு வெற்றிக்கான வாய்ப்பு இன்னொருவர் செல்வதால் கிடைக்காது என்றார். அன்னாரது இக்கூற்றை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சரியானது என்றே கருதினார்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களையே இப்பணிக்காக அனுப்பி வைத்தார்கள்.

இச்சம்பவத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் காஃபிர்களின் பார்வையிலும் சிறந்த கண்ணியமிக்கவராக திகழ்ந்தார்கள் என்பது தெரிய வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு மிகவும் கண்ணியம் அளித்து வந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுத்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் படுத்தே இருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்பொழுதும் அன்னார் அவ்வாறே படுத்திருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடனே சுதாரித்துக் கொண்டு தமது ஆடையை சரி செய்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய இயல்பில் அதிக வெட்க உணர்வு உள்ளது. ஆகவே அவருடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து நான் இவ்வாறு செய்து கெண்டேன் என்றார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பும் கூட மதுவை அருந்தாத, விபச்சாரத்தை நெருங்காத அரிய மக்களுள் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அரபு நாட்டில் மது அருந்துவது பெருமையான விஷயமாகவும், விபச்சாரத்தில் ஈடுபடுவது வழக்கமான தினசரி வேலையாகவும் கருதப்பட்டது. இவ்வாறான சிறப்பம்சங்கள் ஒருசிலரிடத்தில் மட்டுமே காணப்பட்டது.

சுருக்கமாக, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சாதாரண மனிதர் ஒன்றும் கிடையாது. மிகவும் உயரிய நல்லொழுக்கங்கள் அன்னாரிடம் காணப்பட்டன. உலக கண்ணியத்தைப் பொறுத்தவரையில் அன்னார் மிக மேலான இடத்தில் இருந்தார்கள். இஸ்லாத்தின் ஆரம்பகால தொண்டராக இருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மீது மிகவும் திருப்தி கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணம் வரையிலும் அன்னாரின் மேலான விருப்பத்தை பெற்று வந்த அந்த ஆறு நபர்களுள் ஒருவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மேலும் அன்னார் அஷ்ரா முபஷ்ஷிராவில் (நற்செய்தி பெற்ற பத்து நபர்களில்) ஒருவராக இருந்தார்கள். அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கிய பத்து நபர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 251–253)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட நாளைக் குறித்து இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 17 அல்லது 18 துல்ஹஜ்ஜா அன்று ஹிஜ்ரி 35 ஆம் ஆண்டு ஜுமுஆ நாளில் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

அபூ உஸ்மான் நஹதியைப் பொறுத்தவரை, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் தஷ்ரீக் நாட்களுக்கு நடுவில் நடந்தது. அதாவது துல்ஹஜ்ஜா 12 ஆம் நாளில்.

இப்னு இஸ்ஹாக்கைப் பொருத்தவரை, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட சம்பவம் நடந்து 11 வருடங்கள், 11 மாதங்கள், 22 நாட்கள் கழிந்த பின் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்து 25 வருடங்களுக்கு பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஷஹாதத் நடந்தது.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 159 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் உமர் பின் உஸ்மான் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் 18 துல்ஹஜ்ஜா ஜுமுஆ நாளன்று, ஹிஜ்ரி 36–ல் அஸர் தொழுகைக்குப் பிறகு 82 ஆம் வயதில் ஷஹாதத்தை அடைந்தார்கள். ஷஹீதாகும்போது அன்னார் நோன்பு நோற்றிருந்தார்கள். அபூமஹ்ஷர் அவர்களைப் பொருத்தவரை, அன்னார் ஷஹீதாகியபோது வயது 75 ஆக இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 43 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நல்லடக்கம் பற்றி கூறப்படுகிறது. நியாஸ் பின் முகர்ரம் அறிவிக்கிறார்கள்: சனிக்கிழமை இரவு, மக்ரிப் இஷாவுக்கு இடைப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் உடலை நாங்கள் நால்வர் தூக்கினோம். அதாவது நானும், ஜுபைர் பின் முத்அமும், ஹக்கீம் பின் ஹிஸ்ஸாம் மற்றும் அபூ ஜஹம் பின் ஹுஸைஃபா ஆகியோர். ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்அம் அன்னாருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். முஆவியா அவர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளார்கள். இந்த நால்வர்தான் அன்னாருடைய கபரில் இறங்கினார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்அம் அவர்கள் 16 நபர்களுடன் சேர்ந்து அன்னாருடைய ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள் என்று வருகிறது.

அல்லாமா இப்னு சஅத் அவர்களின் கூற்று என்னவென்றால், முதல் அறிவிப்பு சரியானதாக தெரிகிறது. அதாவது நான்கு பேர் சம்பந்தமாக வருவது. நான்கு பேர் அன்னாருடைய ஜனாஸாவை தொழ வைத்தார்கள் என்று வந்துள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 43 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அப்துல்லாஹ் பின் உமர் பின் உஸ்மான் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சனிக்கிழமை இரவில், மக்ரிப் இஷாவுக்கு இடைப்பட்ட நேரத்தில் ஹஷ்ஷே கவ்கப் எனும் இடத்தில்

நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ரபீப் பின் மாலிக் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: மக்கள் தம்மில் இறந்தவர்களை ஹஷ்ஷே கவ்கபில் அடக்கம் செய்ய விரும்பினர். ஹஷ் என்பது சிறிய தோட்டத்தைக் குறிக்கும். கவ்கப் என்பது இந்த தோட்டத்தின் எஜமானரான ஒரு அன்ஸாரியின் பெயராகும். இது ஜன்னத்துல் பகீஃ–க்கு மிக அருகில் இருந்தது. விரைவில் ஒரு நல்லடியார் மரணிப்பார். அவர் அங்கே நல்லடக்கம் செய்யப்படுவார் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். அதாவது அவர் ஹஷ்ஷே கவ்கபில் நல்லடக்கம் செய்யப்படுவார்.

மாலிக் பின் அபூ ஆமிர் அவர்கள் கூறுகிறார்கள்: அங்கு அடக்கம் செய்யப்பட்டவர்களுள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் முதலாவது நபராக இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 42, 43 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நல்லடக்கம் குறித்து ஓர் அறிவிப்பு இவ்வாறும் காணக் கிடைக்கிறது. அதாவது குழப்பவாதிகளும், கிளர்ச்சியாளர்களும் மூன்று நாட்கள் வரை அன்னாரை அடக்கம் செய்ய விடவில்லை.

தப்ரியின் வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அபூ பஷீர் ஆபிதி அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் உடல் மூன்று நாட்கள் வரை கஃபனிடப்படாமல், அடக்கம் செய்யப்படாமல் இருந்தது. அவ்வுடலை அடக்கம் செய்ய விடவில்லை. பிறகு ஹஸ்ரத் ஹகீம் பின் ஹஸாம், ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்அம் ஆகியோர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை நல்லடக்கம் செய்ய அவர்களின் குடும்பத்தினரிடம் அனுமதி கேட்கும்படி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினர். ஆகவே ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பேசினார்கள். வீட்டினர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். குழப்பவாதிகள் இதைக் கேட்டபோது கற்களை எடுத்துக் கொண்டு வழியில் அமர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஜனாஸாவுடன் அவரது குடும்பத்தைச் சேர்ந்த சிலர் வெளியேறினார்கள். அவர்கள் மதீனாவில் ஹஷ்ஷே கவ்கப் என்றழைக்கப்பட்ட ஒரு பகுதிக்கு செல்ல விரும்பினர். யூதர்கள் அங்கு தம் பிணங்களை அடக்கம் செய்து வந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஜனாஸா வெளியே வந்தபோது அம்மக்கள் அன்னாரைக் கொண்டு வந்த கட்டிலின் மீது கல்லெறிந்து, அன்னாரை கீழே விழச்செய்ய செய்வதிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அம்மக்களுக்கு செய்தி அனுப்பினார்கள். எனவே அவர்கள் விலகிக் கொண்டார்கள். ஜனாஸா தொடர்ந்து எடுத்துச் செல்லப்பட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஷ் கவ்கபில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அமீர் முஆவியா அவர்கள் மக்களின் மீது ஆதிக்கம் பெற்றபோது நடுவில் இருந்த சுவரை உடைத்து பகீஃ கபருஸ்தானுடன் இணைத்து விடும் வகையில் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்கள். மக்கள் தம்மில் இறந்தவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கபரைச் சுற்றி அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். இறுதியில் அந்த பகுதி முஸ்லிம்களின் கபருடன் இணைந்து விட்டது.

(தாரீக் திப்ரீ தொகுதி 2 பக்கம் 687 – 1987 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சில வரலாற்று நூல்களில் அந்த இடத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தாமே வாங்கி ஜன்னத்துல் பகீஃயுடன் இணைத்து விட்டதாக கூறப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்திஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 586 உஸ்மான் பின் அஃபான் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் மேற்கொண்டு இன்னும் உள்ளது. அது இனி வருங்காலத்தில் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

இன்று சில ஜனாஸாக்களையும் நான் தொழ வைப்பேன். அவர்களைக் குறித்து இப்போது கூறி விடுகிறேன். முதலாவது ஜனாஸா ஐவெரிகோஸ்டின் முபல்லிக் ஜனாப் முஹம்மது இத்ரீஸ் சாஹிப் அவர்களுடையதாகும். சிறிது காலம் நோயுற்று இருந்தார்கள். பிப்ரவரி 27, 28 க்கு இடைப்பட்ட இரவில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் ஐவெரிகோஸ்டைச் சேர்ந்தவர். ஆரம்ப கல்வியை கற்ற பிறகு இவர் புர்கினோஃபாஸோ சென்று விட்டார். உலகக் கல்வியுடன் அரபி மொழியிலும் புலமை பெற்றிருந்தார். 60–களில் இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். 1983 ஆம் ஆண்டில் மனமகிழ்ச்சியுடன் பாகிஸ்தான் சென்றார். ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் கல்வி பயின்ற பிறகு முபல்லிக் ஆக ஐவெரிகோஸ்டில் தொண்டாற்றும் நற்பாக்கியத்தைப் பெற்றார். Ghana மற்றும் புர்கினோஃபாஸோவில் தொண்டாற்றிய பிறகு செப்டம்பர் 2007 முதல் மீண்டும் ஐவெரிகோஸ்டில் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றுக் கொண்டிருந்தார். மர்ஹூம் மூஸியாவார்.

இவர் பாகிஸ்தானுடைய சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். அதுவும் சுவாரஸ்யமான சம்பவமாகும். அவர் தம்மிடத்தில் சேர்த்து வைத்த சேமிப்பைக் கொண்டு விமான டிக்கட் எடுத்தார். பாகிஸ்தான் சென்றடைந்த பிறகு யாருக்கும் தகவல் கொடுக்கவில்லை. ஐவெரிகோஸ்ட் ஜமாஅத்திற்கும் தகவல் கொடுக்கவில்லை. பாகிஸ்தானிலும் யாருக்கும் தகவல் கொடுக்கவில்லை. அங்கு சென்றடைந்த பிறகு ஏர்போர்ட்டை விட்டு வெளியே வந்தார். மிகவும் கவலையில் இருந்தார். ஒருவர் அங்கு நின்று கொண்டிருந்தார். இவர் அவரிடம் சென்றார். அவ்வாறன்று! அந்த நபர் இவரிடத்தில் வந்தார். தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு செல்ல வேண்டும்? எனக் கேட்டார். மர்ஹூமுக்கு ஆங்கிலம் தெரியாது. உருதுவும் தெரியாது. அரபியின் ஒரு சில வாக்கிங்கள் பேசப்பட்டது. அவர் மர்ஹூமை அஹ்மதிய்யா ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

அந்த நபர் கூறுகிறார்: நேற்று இரவு என் மனைவி ஒரு கனவு கண்டார். இந்நாட்டைச் சாராத ஒரு விருந்தாளி வருகிறார். நான் அவரை அழைத்துச் செல்கிறேன். இதனடிப்படையில் நான் விமான நிலையம் வந்தடைந்தேன். விமானத்திலிருந்து தாங்கள் ஒருவர் மட்டுமே இறங்கினீர்கள். கவலையோடு வெளியே நின்று கொண்டிருந்தீர்கள். என் மனைவிக்கு கனவில் தென்பட்ட அந்த விருந்தாளி தாங்கள் தான் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

ஆகவே அல்லாஹ் இவ்வாறு அவருக்கு ஏற்பாடு செய்தான். இந்த சம்பவத்தை பெரும்பாலும் எடுத்துரைப்பார்கள். நான் முழு பயணத்திலும் துஆ செய்து கொண்டிருந்தேன். துஆவின் அற்புதத்தினாலேயே அல்லாஹ் எனக்கான ஏற்பாட்டைச் செய்தான். நான் வருவதைக் குறித்து ஒரு நாள் முன்பே கராச்சியினுடைய ஓர் அஹ்மதியின் மனைவிக்கு அல்லாஹ் கனவைக் காட்டிக் கொடுத்தான்.

இவ்வாறு அவருக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு அவர் அஹ்மதிய்யா ஹால் வந்தடைந்தார். அதன் பிறகு ரப்வா சென்றார். எவ்வாறிருபினும் அவர் மிகவும் நல்ல, துஆ செய்யக்கூடிய சான்றோர் ஆவார்.

ஐவெரிகேஸ்டின் மிஷனரி இன்சார்ஜ் கய்யூம் பாஷா சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: புர்கினோஃபாஸோவிலும் நாங்கள் இருவரும் 3 ஆண்டுகள் ஒன்றாக பணியாற்றினோம். பிறகு ஐவெரிகோஸ்டிலும் ஒன்றாக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஜமாஅத்துடனும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் எல்லையற்ற நேசம் கொண்டிருந்தார். மிகவும் அர்ப்பணிப்பவராக இருந்தார்கள். இபாதத்தை பேணுபவராக இருந்தார். வள்ளலாக இருந்தார். மக்களுக்கு மிகவும் அதிகமாக உதவி வந்தார்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

குழந்தைகளை வீட்டில் பராமரித்து அவர்களின் கல்வி மற்றும் இதர செலவுகளை ஏற்றுக் கொண்டிருந்தார். மார்க்கத்தின் தப்லீக்கில் எப்போதும் முன்னிலையில் இருந்தார். விருந்தோம்பல் அன்னாருடைய தனிப்பட்ட அடையாளமாக திகழ்ந்தது. தப்லீக் செய்வதற்காக இவர் உட்கார்ந்து விட்டால் இவரைச்சுற்றி மக்கள் ஒன்றுகூடி விடுவார்கள். தஹஜ்ஜுதை முறையாக பேணுவார். உண்மை கனவுகளை காண்பவராக இருந்தார். தன்னலமற்றவராக இருந்தார்.

ஐவெரிகோஸ்டின் முஅல்லிம் சித்தீக் ஜயாலு சாஹிப் கூறுகிறார்: மவ்லவி இத்ரீஸ் சாஹிப் அவர்கள் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் பித்தராக இருந்தார். எல்லா நேரமும் ஜமாஅத்துக்காக எல்லா தியாகங்களுக்கும் ஆயத்தமாக இருந்தார். ஐவெரிகோஸ்டில் இவரை விட அதிகமாக ஜமாஅத்தை நேசிக்கக்கூடியவர் வேறு நபரை நான் கண்டதில்லை. உங்களுடைய சமுதாயம் எது என்று கேட்கப்பட்டால், நான் ஆஃப்ரிக்கனும் கிடையாது, ஐரோப்பியனும் கிடையாது. நான் வேறு எந்த நாட்டைச் சேர்ந்தவனும் கிடையாது. எனது அடையாளம், எனது சமுதாயம் அஹ்மதிய்யத் ஆகும் என்று கூறுவார்கள். ஐவெரிகோஸ்டின் ஆரம்ப கால அஹ்மதிகளுள் ஒருவராவார்.

ஐவெரிகோஸ்டின் முபல்லிக் பாஸித் சாயிப் எழுதுகிறார்: கிலாஃபத்துடன் ஒன்றியிருக்க வேண்டும் என எப்போதும் வலியுறுத்துவார். நான் பெற்ற அருள்கள் அனைத்துமே கிலாஃபத்தின் மூலமாகவே கிடைத்தது என்று கூறுவார். கல்வி அடிப்படையிலும் மிக உயர்ந்த சான்றோராக திகழ்ந்தார். ஜூலாஜோ இவருடைய தாய்மொழியாக இருந்தது. இத்துடன் பிரன்ஞ், அரபி, உருதுவிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். இலக்கியத்தில் புலமை பெற்றவராகவும், நன்கு விவாதம் செய்பவராகவும் இருந்தார். வஹாபி ஆலிம்களுடன் விவாதம் செய்து வந்தார்.

அப்துல்லாஹ் சாஹிப் என்ற ஓர் அஹ்மதி சகோதரர் ஸான் பெத்ரோ என்ற இடத்தில் நடந்த விவாதம் குறித்து கூறுகிறார்:

வஹாபிகளின் பள்ளிவாசலுக்கு சென்றடைந்தேன். திருக்குர்ஆனில் இருந்து மட்டுமே சான்றுகளை எடுத்து வைக்க வேண்டும் என விவாத நிபந்ததை வகுக்கப்பட்டது. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்ச்சியாக விவாதம் நடைபெற்றது. தொழுகைக்காக மட்டும் இடைவெளியில் நேரம் விடப்பட்டது. விவாதத்தின்போது மவ்லவி சாஹிப் அவர்கள் எதிர்தரப்பு மவ்லவி முன் எவ்வாறான சான்றுகளை எடுத்து வைத்தார்கள் என்றால், அதை அவரால் மறுக்க இயலவில்லை. தம் தோல்வியை அவர் ஒப்புக் கொண்டார். இந்த விவாதத்தில் அஹ்மதியத்திற்கு வெற்றி கிடைத்தது.

பிறகு எழுதுகிறார்: மர்ஹூமுடைய இருப்பு Library-ஐ போன்றதாகும். தப்லீக் களத்தில் சான்றுகள் அன்னாருக்கு மனனமாக தெரியும். அது உருதுவில் இருந்தாலும் சரி! அரபியில் இருந்தாலும் சரி! பிரன்ச்சில் இருந்தாலும் சரி! எந்த மொழியில் இருந்தாலும் உடனே சான்றை எடுத்துக் கூறுவார். துஆவை தமது ஆயுதமாக பயன்படுத்தி வந்தார். துஆ செய்யும்படி எல்லாருக்கும் அறிவுறுத்துவார்.

மர்ஹூமுக்கு 4 மகள்கள் மற்றும் 1 மகன் உள்ளனர். அக்குழந்தைகளையும் ஜமாஅத் அமைப்புடனான தொடர்பில் உறுதியானவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக. மர்ஹூமுடைய விருப்பத்திற்கேற்ப அவர்களை ஜமாஅத்தின் அங்கமாக மாற்றுவானாக. அவர்களுக்கு அந்த அளவு தொடர்பு இல்லைதான். அல்லாஹ் அருள் செய்வானாக. அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

இரண்டாவது ஜனாஸா, அமீனா நய்கா கரே சாஹிபா அவர்களுடையதாகும். இவர் யுகண்டாவின் அமீர், மிஷனரி இன்சார்ஜ் முஹம்மது அலி காரே சாஹிபின் மனைவியாவார். பிப்ரவரி 20 அன்று வஃபாத் ஆனார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

பணிவுள்ள, படித்த, துணிவுள்ள பெண்மணியாவார். இவருடைய கணவர் காரே சாஹிப் கூறுகிறார்: நான் வெற்றிகரமான முரப்பியாக ஆகுவதற்கு ஒரு முக்கிய காரணம் எனது மனைவியாவார். யுகண்டாவைச் சேர்ந்தவராக இருந்தார். ஆனால் மிகவும் பற்று, விசுவாசமிக்கவர். எங்களுக்கு திருமணமானபோது மர்ஹூமாவுடைய வயது 19 ஆக இருந்தது. அவருக்கு திருக்குர்ஆன் ஓதத் தெரியாது. ஆனால் அதைக் கற்றுக் கொள்வதற்கு வேட்கையும் ஆர்வமும் இருந்தது. ஆகவே திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொண்டார்கள். அதன் பொருள்களில் ஆழ்ந்து சிந்திக்க முயற்சி செய்தார்கள். பல்வேறு பொறுப்புகளில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றார். 2005 ஆம் ஆண்டு சதர் லஜ்னா இமாயில்லாஹ்வாக நியமிக்கப்பட்டார். தப்லீக்கில் நன்கு ஆர்வமுள்ளவர். பொய் புகார் காரணமாக இரு முறை அநீதியான முறையில் சிறைச்சாலை செல்ல நேரிட்டது. இவருடைய தவறு கிடையாது. தர்பிய்யத் விவகாரத்தில் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். மிகத் துணிவுடன் ஜமாஅத் அல்லாதவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் அளித்து வந்தார்கள்.

மர்ஹூமாவுடைய மகள் கூறுகிறார்: உடல் நலத்துடன் இருக்கும்போதும் சரி! நோய்வாய்ப்பட்டிருக்கும் போதும் சரி! எல்லா நிலையிலும் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதத்தில் இஃதிகாஃப் இருப்பார்கள். தன் மீதான ஆட்சேபனைகளை பொறுத்துக் கொள்வார்கள். ஆனால் மார்க்க ரீதியிலான ஆட்சேபனைகளை கொஞ்சம் கூட பொறுக்க மாட்டார்கள். அரசியல் அரங்கில் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் நல்வாய்ப்பு மர்ஹூமாவுக்கு கிடைத்துள்ளது. மூஸியாவார். தமக்குப் பின்னால் கணவர் மட்டுமின்றி, 6 மகன்களை விட்டுச் சென்றுள்ளார். அவர்களுள் இருவர் மிஷனரி ஆவார்கள்.

அடுத்த ஜனாஸா சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய லவி கஸ்க் சாஹிப் அவர்களுடையதாகும். டிசம்பர் 10 ஆம் தேதி 48 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமுடைய குடும்பத்தில் 1928 ஆம் ஆண்டு அஹ்மதியத் வந்தது. அப்போது ஹஸ்ரத் மவ்லானா ஜலாலுத்தீன் ஷம்ஸ் சாஹிப் அவர்கள் டமாஸ்கஸிலிருந்து ஹைஃபாவுக்கு சென்றிருநதார்கள். ஹைஃபாவுடைய முதல் அஹ்மதி மதிப்பிற்குரிய ராஷித் பகீஸ் புஸ்தி சாஹிபின் தப்லீக் மூலமாக மர்ஹூமின் கொள்ளுத் தாத்தா அலி ஷாலிஹ் கஸ்க் சாஹிபும் அவருடைய சகோதரர் முஹம்மது கஸஹ் சாஹிபும், தந்தையும் உர்தன் ஜமாஅத்தின் முன்னாள் சதருமான தாஹா கஸக் சாஹிப் அவர்களும் குடும்பத்துடன் பைஅத் செய்தார்கள். பிறகு இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது இவருடைய குடும்பத்தினர் டமாஸ்கஸ் ஹிஜ்ரத் செய்து விட்டனர்.

மர்ஹூம் மிகவும் பற்றுள்ள அஹ்மதியாவார். தொழுகை, நோன்பை பேணக் கூடியவர். சந்தாவை முறையாக செலுத்தக் கூடியவர். கிலாஃபத்தை நேசிக்கக் கூடியவர். ஜமாஅத்தின் தொண்டுகளில் முன்னிலையில் இருக்கக்கூடியவராக திகழ்ந்தார்கள். வறுமையான நிலையிலும் பிறருக்கு பொருளாதார உதவி செய்யக் கூடியவராக இருந்தார். அனுதாபம் கொள்ளக் கூடியவராகவும், நல்ல மனிதராகவும் இருந்தார். மர்ஹூம் இரண்டு மனைவிகள் மட்டுமின்றி, மூன்று இளம் வயது பெண் பிள்ளைகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். இரண்டு மகள்கள் வக்ஃபே நவ்வில் இருக்கின்றனர்.

ஜமாஅத்தின் தலைவர் வஸீம் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூமுடைய தொண்டுகள் குறித்து கூறப்படும்போதெல்லாம் குறிப்பாக ஒன்று கூறப்படும். அதாவது நோயாளிகளையும், காயமடைந்தவர்களையும் மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பார்கள். சிரியாவின் நிலைமைகள் அவ்வாறு உள்ளன. இந்த நிலைமைகளில் தயக்கமின்றி இப்பணியைச் செய்து வந்தார்கள். அவ்வாறே மஜ்லிஸே ஆமிலாவின் உறுப்பினர்களை சுற்றுப் பயணத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அவருக்கு கார் கொடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் இவர்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

வேலையும் செய்து வந்தார். எப்போது தொண்டுக்கு அழைத்தாலும் உடனே ஆஜராகி விடுவார்கள். மலர்ந்த முகத்துடன் தொண்டு செய்வார்கள். மன ஆர்வத்துடன் இந்த அனைத்துப் பணிகளையும் செய்து முடிப்பார்கள். மிகவும் முறையாக சந்தா செலுத்தி வந்தார். இறுதிக் காலத்தில் மிகவும் அதிகமாக கொடுத்து வந்தார். அஹ்மதிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவியும் வந்தார்.

மர்ஹூம் அவர்கள் பணிவு, குறைவாக பேசுதல், கலப்பற்றதன்மை, படைப்பினங்களுக்கு தொண்டு செய்தல், நற்சிந்தனை ஆகியவற்றின் காரணமாக அனைவரின் மீதும் தம்முடைய நல்ல தாக்கத்தை விட்டுச் சென்றுள்ளார்கள்.

மர்ஹூமுடைய மனைவி கதீஜா அலி சாஹிபா கூறுகிறார்கள்: எனது கணவர் அல்லாஹ்வின் அருளால் மிகவும் பற்றுள்ள அஹ்மதியாக இருந்தார்கள். மிக அதிகமாக ஜமாஅத்தை நேசித்து வந்தார்கள். மக்களுக்கு உதவி புரிவது அவர்களுக்கு மிகவும் பிரியமானதாக இருந்தது. வீட்டு வேலைகளில் எனக்கு உதவி புரிந்தார்கள். தம் பெண் பிள்ளைகளை மிகவும் நேசித்தார்கள். அவர்களின் நல்ல தர்பிய்யத்திற்கு அக்கறை கொண்டவராக இருந்தார்கள். அவர்களுடன் அமர்ந்து நீண்ட நேரம் ஜமாஅத் பற்றி பேசிக் கொண்டிருப்பார். அல்லாஹ்வுடைய அருளால் தமது வாழ்வின் இறுதி வருடம் வரை ஜமாஅத்திற்கு தொண்டு செய்தவாறு கழித்தார். இதில் மிகவும் மகிழ்ச்சி கொண்டிருந்தார்.

இவருடைய சிறியன்னை வழி சகோதரர் அக்ரம் சல்மான் சாஹிப் கூறுகிறார்கள்: (சிறியன்னை வழி சகோதரர் இவர் மூலமாக பைஅத் செய்திருந்தார். அவர் கூறுகிறார்:) பைஅத்திற்கு முன்பும் கூட நாங்கள் மர்ஹூமுடைய உயர் ஒழுக்கத்திற்கு சாட்சியாக உள்ளோம். அவரது பொருளாதாரம் நன்றாக இருக்கவில்லை. அவ்வாறிருநதும் தம்முடைய ஏழை உறவினர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்.

என்னை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கிய சம்பவம் என்னவென்றால், ஒரு முறை ஒரு நல்ல வேலை அவருக்கு கிடைத்தது. அதன் மூலம் அவருடைய அனைத்து கடன்களும் தீர்ந்தன. அதன் பிறகு அவர்கள் செல்வத்தை சேர்ப்பதற்கு பகரமாக என்னுடைய ஏழை சிறியன்னைகளுக்கு ஒரு பெரும் தொகையை கொடுத்தார்கள். என்னுடைய உடல்நிலை நன்றாக இருக்கும்போது, என்மீது எந்த கடனும் இல்லாமல் இருக்கும்போது நான் செல்வந்தனாவேன். நான் தேவையை விட அதிகமான செல்வத்தை தேவையுடையவர்களுக்கு செலவழிக்க விரும்புகிறேன். இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று கூறி வருவார்.

இவ்விஷயம் என்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. ஏனென்றால் இவ்வாறான போதுமென்ற மனமும், பொருள் தியாகம் செய்யும் இவ்வாறான ஆற்றலையும் நான் என் வாழ்நாளில் எவரிடத்திலும் காணவில்லை. நாங்கள் இரு சகோதரர்கள் பைஅத் செய்த பிறகு, எங்களுடைய கல்வி, தர்பிய்யத் மற்றும் கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு பெரும் முயற்சி செய்தார்கள். கிலாஃபத்தின் அருள்களினால் பயனடைந்த, தாக்கத்தை ஏற்படுத்தும் சம்பவங்களை எங்களுக்கு எடுத்துரைப்பார். அதன் காரணமாக எங்களுடைய உள்ளங்களில் கிலாஃபத்தின் நேசம் உருவாயிற்று.

இவருடைய சகோதரர் முஃதஸ்கஸ்க் சாஹிப் கூறுகிறார்: இவர் கனடா ஜாமிஆவில் ஆசிரியர் ஆவார். இவ்வாறு எழுதுகிறார்: என்னுடைய மர்ஹூம் சகோதரர் மிகவும் கலப்பற்றவராகவும், கிலாஃபத்தை நேசிப்பவராகவும் இருந்தார். எங்களுடைய மூதாதையர்கள் அஹ்மதியாக இருந்தாலும் அஹ்மதிய்யத்தைப் பற்றி எங்களுக்கு தெரியாமல் இருந்தது. என்னுடைய சகோதரர் தனது பாட்டனார் கிஷ்ர் கஸ்க் –ன் ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ள ஹலப் நகரிலிருந்து டமாஸ்கஸ் சென்றார். அங்கு அஹ்மதி அன்பர்களை அவர் சந்தித்தார். ஜமாஅத்தைப் பற்றி கருத்துப் பறிமாற்றம் நடந்தது. அவர் திரும்பி வந்த பிறகு சஜ்தாக்களில் மிக அதிகமாக அழுவதை நான் கண்டேன். இந்த திடீர் மாற்றத்தைக் கண்டு வியப்படைந்து விட்டேன். அதற்கான காரணத்தைக் கேட்டபோது, எனக்கும் ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்தார். பிறகு நான் ஆராய ஆரம்பித்தேன்.

முதலில் பெயரளவில் மட்டுமே அஹ்மதியாக இருந்துள்ளார். பிறகு முறையாக ஜமாஅத்தின் போதனை பற்றி ஆராய்ந்துள்ளார். பிறகு ஒரு கனவைக் கண்ட பிறகு மீண்டும் பைஅத் செய்து விட்டேன். என்னுடைய சகோதரனிடத்தில் காணப்பட்ட நல்ல மாற்றம், எனது பைஅத்திற்கு பெரும் காரணியாக இருந்தது.

இரண்டாவது முறையாக பைஅத் செய்தார் என்பதன் பொருள், வம்சாவளியாக பெயரளவில் அஹ்மதியாக இருந்துள்ளார். செயலளவில் அஹ்மதியாக இருக்கவில்லை. பிறகு புரிந்து மீண்டும் பைஅத் செய்திருக்கிறார்.

மர்ஹூமுக்கு தப்லீக்கில் பெரும் ஆர்வம் இருந்தது. காலத்தின் கலீஃபாவுக்காக அதிகமாக துஆ செய்து வந்தார்கள். வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார்கள். தமது மரணம் அண்மையில் இருப்பதை மர்ஹூம் உணர்ந்து கொண்டார். அதைக் குறித்து சில நாட்களுக்கு முன்பு தமது தாயாரிடமும், மனைவிகளிடத்திலும் கூறி விட்டார்.

அடுத்த ஜனாஸா ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பர்கத் நஸீம் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் மதிப்பிற்குரிய முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களின் துணைவி ஆவார். இவர் மாஸ்டர் சாஹிப், சவுத்ரி சாஹிப் என்று அழைக்கப்படுகிறார். டிசம்பர் 26 அன்று 86 ஆம் வயதில் அவர்கள் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமாவுடைய தந்தை மியான் இல்ம் தீன் சாஹிப் அவர்களும், பாட்டனார் மியான் குதுபுத்தீன் சாஹிப் அவர்களும் லோதி நங்கல், குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகள் ஆவார்கள்.

மர்ஹூமா எண்ணற்ற சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரர் ஆவார். தொழுகை, நோன்பை பேணக்கூடியவர், தஹஜ்ஜுத் தொழக் கூடியவர், பொறுமைசாலி, நன்றி செலுத்தக்கூடியவர், துஆ செய்யக்கூடியவர், எளிமையான இயல்பை உடையவர், ஏழைகளை பராமரிப்பவர், கிலாஃபத்துடன் எல்லையற்ற நேசம் கொண்ட நல்ல பெண்மணியாக திகழ்ந்தார்கள். பொருளாதார திட்டத்தில் முந்திக் கொண்டு பங்கெடுப்பவர் ஆவார். பல்வேறு முறை, பல்வேறு திட்டங்களில் தமது நகைகளை கொடுக்கும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார்கள். மர்ஹூமா மூஸியாவார். தமக்குப் பின்னால் 3 மகன்கள், 3 மகள்கள் மற்றும் எண்ணற்ற பேரன் பேத்திகளை விட்டுச் சென்றுள்ளார். இவருடைய இரண்டு மகள்வழி பேரன்கள் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்கள். ஒரு மகனும் முரப்பியாக உள்ளார். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இந்த அனைத்து மர்ஹூம்களுடன் அல்லாஹ் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக.

(தமிழில்: மவ்லவி A.P.A தாரிக் அஹ்மது)

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

# ஜுமுஆ பேருரை

**அவர் ஆன்மீக மற்றும் பௌதீக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் ஓர் அம்சம் தொடர்பாக அன்னாரின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து சுருக்கமான நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1908 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் தேதி ஒரு மிகப்பெரும் கருத்துச் செறிவுமிக்க சொற்பொழிவை ஆற்றினார்கள். நாம் எவ்வாறு வெற்றி பெற முடியும்? என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். இந்த சிந்தனைகள் 19 வயதுடைய இளைஞருடையதாகும். அந்த சொற்பொழிவில்

اِنَّ اللّٰهَ اشْتَرٰى

مِنَ الْمُؤْمِنِيْنَ اَنْفُسَهُمْ وَ اَمْوَالَهُمْ بِاَنَّ لَهُمُ الْجَنَّةَ......وَبَشِّرِ الْمُؤْمِنِيْنَ

என்ற சூரா தவ்பாவின் 111, 112 வசனங்களை ஓதினார்கள். அதன் பிறகு கூறினார்கள்: ஒவ்வொரு மனிதனும் இறைவன் ஏன் என்னை படைத்தான்? என்பதை சிந்திக்க வேண்டும். அதே நேரம் மரணிப்பது எல்லா மனிதர்களுக்கும் அவசியமாக இருக்கின்றது. மரணித்த பிறகு என்ன நடக்கும்? என்பதையும் மனிதன் சிந்திக்க வேண்டும். சில நாட்கள் வாழ்க்கைக்காக மனிதன் இந்த அளவிற்கு முயற்சி செய்கின்றான். திட்டங்கள் தீட்டுகின்றான் என்றால் முடிவு பெறாத வாழ்க்கைக்காக முயற்சிகள் அவசியமில்லையா? அதாவது மறு உலகின் வாழ்க்கை என்பது எல்லையற்றதாகும். அந்த வாழ்க்கைகாகவும் நாம் ஏதாவது ஏற்பாட்டை செய்ய வேண்டுமல்லவா?

இது மிக முக்கியமான கேள்வியாகும். திருக்குர்ஆனின் போதனைகளின் ஒளியில் அன்னார் விவரிக்கின்றார்கள்: மனிதன் ஒரு சிறிய வியாபாரம் செய்யும்போது கூட மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றான். எது நன்மையாகவும், பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றதோ அதனையே மனிதன் வாங்குகின்றான். அவ்வாறிருக்க லட்சங்கள் அல்ல; கோடிகளும் அல்ல; இன்னும் கூறப்போனால் எல்லையற்ற லாபம் தரக்கூடிய வியாபாரத்தை மனிதன் செய்யாமல் இருப்பது எவ்வளவு வேதனைக்குரியதாகும்.

எனவே திருக்குர்ஆனின் போதனையின் ஒளியில் அன்னார் கூறுகின்றார்கள்: தனக்கு பயனளிக்கக்கூடிய செல்வங்களை மனிதன் ஒன்றுதிரட்ட வேண்டும். அதை விட்டு விட்டு தனக்குப் பிறகு வாரிசுகளை அழிவிற்குள்ளாக்கும் செல்வங்களை ஒன்று திரட்டக்கூடாது. இந்த உலகியல் செல்வங்கள் வாரிசுகளை அழித்து விடக்கூடும். ஆனால் மனிதன் திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ள இந்த வியாபாரத்தை செய்வானே என்றால் அது அவனுக்கு லாபம் அளிக்கக்கூடியதாக இருக்கும். அதன் பிறகு எவரும் அதனை அழிவிற்குள்ளாக்க முடியாது. இன்னும் கூறப்போனால் மரணித்த பிறகும் அவனுக்கு பயனளிக்கக்கூடியதாக இருக்கும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் அத்தகைய வியாபாரிகளுக்கு தான் சுயமே கணக்கராக ஆகிவிடுகின்றான். எனவே எவரது கணக்கராக இறைவன் ஆகிவிடுகிறானோ அவருக்கு வேறு என்ன தேவை இருக்க முடியும்? எவர் இவ்வாறு இறைவனுடன் வியாபாரம் செய்கின்றாரோ, இறைவனின் படைகளில் நுழைந்து விடுகின்றாரோ அவர் தைரியமாக இருக்க வேண்டும். அத்தகைய நபர்கள் தமது உயிரை சொல்லால் அல்ல மாறாக செயலால் இறைவனிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

ஹுஸூர் அவர்கள், அது போன்று வியாபாரம் செய்யக்கூடியவர்களின் உதாரணமாக ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆகியோரின் வெற்றிகளை குறிப்பிட்டுள்ளார்கள். எவ்வாறு அவர்களுக்கு எதிரிகளின் மீது இறைவன் வெற்றி வழங்கினான் என்பதைக் கூறியுள்ளார்கள். இந்த வியாபாரத்தில் லாபம் பெறுவதற்கு சில நிபந்தனைகள் உள்ளன. முதலாவது நிபந்தனை என்னவென்றால், மனிதன் எப்போதும் தனது பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு பாவமன்னிப்பு கேட்பதன் மூலம் மனிதன் தனது உள்ளத்திலுள்ள துருக்களை அகற்றி விடுகின்றான். இரண்டாவதாக, மனிதன் இறைவனுடனான தொடர்பை உறுதிபடுத்துவதற்காக இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மூன்றாவதாக, இறைவனைப் புகழ்வது, நன்றி கூர்வது மற்றும் இறைவனின் கருணைகளை நினைவு கூர்வதற்கு முயல வேண்டும். நான்காவதாக, நன்மைகளை ஏவ வேண்டும். ஐந்தாவதாக, இறைவனின் வரம்புகளை பாதுகாக்க வேண்டும். அதாவது அல்லாஹ் வகுத்துள்ள எல்லைகளை பாதுகாக்க வேண்டும். இந்த விஷயங்களின்படி அமல் செய்யக்கூடிய கலப்பற்றதன்மை கொண்ட நம்பிக்கையாளர் வெற்றிவாகை சூடி இறைவனிடமிருந்து நற்செய்தி பெறுகின்றார். (தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 6,7)

அடுத்து 1916 ஆம் ஆண்டில் கிலாஃபத் அரியணையில் அமர்ந்த 2ம் ஆண்டில் அன்னார் இறை தியானம் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் அன்னார் மிகவும் தனிச்சிறப்பான முறையிலும், உள்ளம் கவரும் வகையிலும் இறை தியானத்தையும், அதனுடன் தொடர்புடைய விஷயங்களையும் எடுத்துரைத்தவாறு இறை தியானம் என்றால் என்ன? அதனுடைய தேவைகள் என்ன? அதனுடைய வகைகள் மற்றும் நன்மைகள் பற்றி ஒளியூட்டியுள்ளார்கள். அன்னார் இதே கட்டுரையில் இன்றைய காலத்தின் சூஃபிகளின் தன்மைகள் தொடர்பாகவும் கூறியுள்ளார்கள். அவர்களின் திக்ரின் வடிவம் என்பது சடங்கு சம்பிரதாயங்களிலும், இறை நெருக்கத்தைப் பெறுவதிலிருந்து மனிதனை விலக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

திக்ர் என்பது நான்கு வகைப்படும். முதல் வகை தொழுகையாகும். இரண்டாவது வகை திருக்குர்ஆன் ஓதுதலாகும். மூன்றாவது, அல்லாஹ்வின் பண்புகளை எடுத்துரைப்பதாகும். அதனை மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து அதனை ஒப்புக் கொள்வதாகும். மேலும் அதன் விளக்கத்தை நாவினால் எடுத்துரைப்பதாகும். நான்காவதாக, இறைப் பண்புகளை தனிமையில் எடுத்துரைத்து சீர்தூக்கிப் பார்ப்பதும், மக்களுக்கு மத்தியில் அதனை வெளிப்படுத்துவதும் ஆகும். இதன் தொடர்ச்சியாக அன்னார் இறை தியானத்தை ஒப்புக் கொள்ளக்கூடியதாக ஆக்குவதற்கு தேவையான வழிமுறைகளையும், திக்ரே இலாஹி செய்வதற்கு உரிய நேரத்தையும் அதவாது என்ன என்ன நேரங்கள் உள்ளன? மற்றும் என்ன என்ன வழிமுறைகள் உள்ளன? என்பதை அன்னார் விளக்கியுள்ளார்கள்.

இதே சொற்பொழிவில் மகாமே மஹ்மூது என்ற அந்தஸ்தை அடையச் செய்யக்கூடிய திக்ர் அதாவது தஹஜ்ஜுத் தொழுகையை தொடர்ந்து தொழுது வருமாறு அன்னார் வழிகாட்டியுள்ளார்கள். மேலும் அதனை

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 15 April 2021 Issue No. 15

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஏற்பாடு செய்வதற்கும், பேணுவதற்கும் 12ற்கும் அதிகமான வழிமுறைகளை கூறியுள்ளார்கள். நாம் எவ்வாறு தொடர்ந்து தொழ முடியும் என்பதற்கான வழிமுறையை கூறியுள்ளார்கள். அதேபோன்று தொழுகைகளில் கவனத்தை நிலைபெறச் செய்வதற்கு திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் அடிப்படையில் அன்னார் 22 வழிமுறைகளை எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் திக்ரே இலாஹி செய்வதால் கிடைக்கும் மகத்துமிக்க நன்மைகளையும் அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 3 பக்கம் 15,16)

இந்த சொற்பொழிவுக்கு மத்தியில் ஒரு குறிப்பிடத்தக்க சம்பமும் நிகழ்ந்துள்ளது. அதாவது சொற்பொழிவுக்கு மத்தியில் அக்கூட்டத்தில் அமர்ந்திருந்த அஹ்மதியல்லாத சூஃபி சாஹிப் (ஒருவர் அங்கு வந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார்.) நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? நீங்கள் எடுத்துரைத்து வருகின்ற ஒவ்வொரு கருத்துக்களையும் பிறருக்கு கூறுவதற்கு சூஃபிகள் பத்து பத்து ஆண்டுகள் தனது சீடர்களிடமிருந்து தொண்டுகளை வாங்கிய பிறகே எடுத்துரைப்பார்கள் என்று கூறி ஒரு துண்டுச் சீட்டை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அனுப்பினார். அதாவது தற்போதைய காலத்து சூஃபிகள் தனது சீடர்களிடம் பத்து ஆண்டுகள் தொடர்ந்து தொண்டுகளை வாங்கிய பிறகு தான் அதைக் கூறி வந்தனர். ஆனால் தாங்களோ ஒரே நேரத்தில் இந்த அனைத்து கருத்துக்களையும் கூறி விட்டீர்கள். தாங்கள் ஒரு கூட்டத்திலேயே அனைத்து இரகசியங்களிலிருந்தும் திரையை அகற்றி விட்டீர்கள். நீங்கள் பெரும் சாதனை செய்து விட்டீர்கள் என்று அவர் கூறினார். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 195)

இறைவனின் படைத்து பரிபாலித்தல் என்ற பண்பு அண்ட சராசரத்தின் அனைத்து பொருட்களையும் சூழ்ந்துள்ளது. பட்டியாலாவில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். அதன் சுருக்கம் இதுவாகும். 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ம் தேதி பட்டியாலாவில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். இறை இருப்பு, இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் உண்மைத்துவம் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உண்மைத்துவத்தை படைத்து பரிபாலித்தல் என்ற பண்பின் மூலம் நிரூபணம் செய்து காட்டினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் பண்புகள் அவனது இருப்பிற்கு சான்றுகளாகும். இறைவனது பண்புகள் மற்றும் அவனது வல்லமைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அந்நிலையில் நிச்சயம் ஒரு வலிமைமிக்க அறிஞரும், கருணை மற்றும் கண்ணியமிக்க இருப்பும் இருக்கவே செய்கின்றான் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சூரா ஃபாத்திஹா திருக்குர்ஆனின் தாய் ஆகும். அதில் நான்கு பண்புகள் கூறப்பட்டுள்ளன. அவை அனைத்து பண்புகளின் சாராம்சம் ஆகும். அதனை சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலம் மனிதன் எல்லா விதமான தவறான செயல்களிலிருந்தும் தப்பிக்க முடியும். உதாரணமாக, முதலாவது பண்பு ரப்புல் ஆலமீன் ஆகும். அதாவது படைத்து பரிபாலித்தல் என்ற பண்பின் தொடர்பு அனைத்து பண்புகளுடனும் இருக்கின்றது. ஒவ்வொரு பொருளும் அவனது படைத்து பரிபாலித்தல் என்ற பண்பிலிருந்து பயன் பெற்றுக் கொண்டே இருக்கின்றது. எனவே இறைவன் ரப்புல் ஆலமீனாக இருப்பது இந்த விஷயத்தை ஒப்புக் கொள்வதற்கு நம்மை நிர்பந்திக்கின்றன. அதாவது எந்த இறைவன் உடலின் பரிணாம வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உயர்தரமான ஏற்பாடுகளை செய்திருக்கின்றானோ அவன் ஆன்மாவின் உயிரோட்டத்திற்கும் தேவையான ஏற்பாடுகளை செய்திருப்பான். அது உடலை விட விலைமதிக்க முடியாததாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: وَاِنْ مِّنْ اُمَّةٍ اِلَّا خَلَا فِيْهَا نَذِيْرٌ

அதாவது எல்லா சமுதாயத்திலும் அல்லாஹ்வின் நபிமார்கள் வந்துள்ளார்கள். அவர்கள் மனிதனின் தர்பிய்யத் மற்றும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு ஏற்பாடுகளை செய்து வந்துள்ளார்கள். இறுதியாக அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை அனுப்பினான். உலகத்தின் அனைத்து சமுதாயங்களையும் அனைத்து காலத்து மக்களையும் சீர்திருத்துவதற்காக அல்லாஹ் அவர்களை அனுப்பினான். அன்னார் மூலமாக ஷரீஅத் முழுமை செய்யப்பட்டு விட்டது. எனவே எனக்குப் பிறகு இறைவனுடன் உரையாடும் கண்ணியத்தைப் பெறக்கூடிய இறை அடியார்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் மக்களுக்கு இந்த ஷரீஅத்தின் கருத்துக்களை எடுத்துரைத்து அவர்களை இறைவனுடன் சந்திக்க வைப்பார்கள் என்று கூறினார்கள்.

எனவே இக்காலத்திலும் அல்லாஹ்வின் ருபூபிய்யத் என்ற பண்பின் அடிப்படையில் அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களை அனுப்பியுள்ளான். அவர்கள் இறைவனுடன் உரையாடுவதற்கும், படைப்பினத்தை சீர் செய்வதற்கும் வாதம் செய்துள்ளார்கள். இறைவனின் செயல் ஒத்தாசைகள் அன்னாரின் முன்னறிவிப்புகள் முழுமை பெறுவதன் மூலம் வெளிப்பட்டன. உயிருள்ள அடையாளங்கள் அன்னாரின் வாதத்தின் உண்மைத்துவத்தையும் நிரூபணம் செய்தன. எவ்வாறு இதற்கு முன்பு தனது அடியார்களின் ஆன்மீக பராமரிப்பை இறைவன் செய்தானோ அதேபோன்று இப்போதும் செய்கின்றான். இறைவன் கூறிய வழிகளில் நடந்து இன்றும் கூட ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக பெறப்பட்ட அந்த அருட்கொடைகளையும், நன்மைகளையும் நாமும் பெற முடியும்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 4,5)

அடுத்து அன்னாரின் ஒரு சொற்பொழிவு இருக்கின்றது. 1919ம் ஆண்டின் ஆரம்பத்தில் இஸ்லாத்தில் கருத்து வேறுபாடுகளின் ஆரம்பம் என்ற தலைப்பில் அன்னார் மாடர்ன் ஹிஸ்டோரிகல் சொஸைட்டி அமைப்பின் ஒரு கூட்டத்தில் இஸ்லாமியா காலேஜ் லாஹூரில் சொற்பொழிவாற்றினார்கள். இந்த சொற்பொழிவு முற்றிலும் சுமார் 100 பக்கங்களைக் கொண்டதாகும். அதன் சாராம்சம் இதுவாகும். நான் கூறியது போன்று 1919ம் ஆண்டு பிப்ரவரி 26ம் தேதி லாஹூரிலுள்ள இஸ்லாமியா காலேஜில் ஹிஸ்டோரிகல் அமைப்பின் சார்பாக ஒரு அசாதாரனமான கூட்டம் நடைபெற்றது. அதில் இவ்வாறு அன்னார் கூறினார்கள். செய்யது அப்துல் காதர் சாஹிப் (வரலாற்று பேராசிரியர்) அவர்களின் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. அப்போது பெரும் பெரும் பேராசிரியர்கள் இருந்தனர். அஹ்மதியல்லாத வரலாற்று பேராசிரியரான அப்துல் காதிர் சாஹிப் அவர்களும் இருந்தார்கள். அவர்களின் தலைமையில் தான் இந்த கூட்டம் நடைபெற்றது. இந்த கட்டுரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தில் பிரிவினைக்கான அடித்தளம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டது. அந்த காலத்திற்குப் பிறகு முஸ்லிம்களிடம் பிரிவினையும், கருத்து வேறுபாடுகளும் பரந்துபட்டதாக ஆகிக் கொண்டு சென்றது. அந்த காலத்தின் வரலாறு இருள் நிறைந்த திரைகளில் மறைந்து கிடக்கின்றது. இஸ்லாத்தின் எதிரிகளைப் பொருத்தவரை இஸ்லாம் என்பது முற்றிலும் கறை படிந்த வடிவமாகும். இஸ்லாமிய மார்க்கத்தின் நண்பர்களுக்கும் கூட தலையை சுற்ற வைக்கும் கேள்விகளும் உள்ளன. அக்காலத்தில் வரலாற்றின் புதை குழியிலிருந்து பாதுகாப்பாக கடந்து செல்லக்கூடிய மக்கள் மிகக் குறைவானவர்கள் ஆவர். எனவே இன்று உங்களுக்கு முன்னால் அது தொடர்பாக சிலவற்றை எடுத்துரைப்பதை நான் விரும்பியுள்ளேன்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

(தொடரும் – இன்ஷா அல்லாஹ்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad